Registered as a News Paper | பக்கங்கள்: 04 | விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | Peoples Daily | மக்கள் தினசரி

நாதம்: 02 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | தை 15 | (29-01-1992) | புதன்கிழமை | ஓசை: 345

இலங்கைக்கு இறக்குமதியாகும்

## ஐரோப்பிய உணவுகளில் அணுக்கதிர் மூலகங்கள்

ஐரோப்பிய நாடுகளிலிருந்து சிறிலங்கா இறக்குமதி செய்யும் பால்மா வகைகள் பலவற்றில் கதிர்வீச்சு மூலகங்கள் கலந்திருப்பதாக சிறிலங்கா அணு விஞ்ஞானி கலாநிதி கிறான்விலி தர்மவர்தனா தெரிவித்தார். அவை மனிதரின் பாவனைக்கு உகந்ததல்ல என்றும் அவர் எச்சரித்துள்ளார். முன்னாள் சோவியத் ரஷ்யாவில் செர்னோபில் அணு உலையில் ஏற்பட்ட கசிவின்பின் சிறிதுகாலம் இறக்குமதி செய்யப்பட்ட உணவு வகைகள் ஆய்வுகூடப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. ஆனால் இப்போது ஐரோப்பாவிலிருந்து (4 ஆம் பக்கம் பார்க்க)

# மேற்குலக மத்தியஸ்துவத்திற்கு சிறிலங்கா அரசு எதிர்ப்பு

## சர்வதேச அரங்கில் தமிழர் பிரச்சினை முக்கியத்துவம் பெறுமென அச்சம்

(கொழும்பு)

**தமிழரின் தேசிய பிரச்சினைக்கு மேற்குலக நாடுகள் மத்தியஸ்துவம் வகிப்பதை சிறிலங்கா அரசு எதிர்த்து வருவதாக கொழும்பு ராஜதந்திர வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது. தமிழ் மக்களின் தேசிய பிரச்சினை சர்வதேச அரங்கில் முக்கியத்துவம் பெறுவதையும் இதனால் ஏற்படும் சர்வதேச நிர்ப்பந்தங்களையும் தவிர்க்கும் நோக்கிலேயே சிறிலங்கா அரசு பல உலக நாடுகளின் சமரச முயற்சிகளை தட்டிக்கழித்து வருகிறது.**

தமிழர் பிரச்சினை சமாதானப் பேச்சுக்கள் மூலம் தீர்வு காணப்படவேண்டும் என்றும், அப்படியான சூழ்நிலை ஏற்படும் பட்சத்தில் அரசுக்கும், புலிகளுக்கும் மத்தியில் மத்தியஸ்துவம் வகிக்க தாம் தயாராக இருப்பதாகவும் பல மேற்குலக நாடுகள் விருப்பம் தெரிவித்துள்ளன. நோர்வே, சுவீடன், சுவிட்சர்லாந்து, அவுஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகள் மத்தியஸ்துவ முயற்சிக்கு விருப்பம் தெரிவித்திருந்தன. நோர்வே, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளின் தலைவர்கள் இது தொடர்பாக சிறிலங்கா ஜனாதிபதிக்கு கடிதங்களையும் எழுதியுள்ளனர்.

கனடா அரசாங்கம் தமிழர் பிரச்சினையில் மத்தியஸ்துவம் வகிக்க விரும்புவதாக நேரடியாகவே அறிவித்திருந்தது.

உலக நாடுகளின் இந்த நல்லெண்ண முயற்சிகளை சிறிலங்கா அரசாங்கம் கருத்தில் எடுக்காது தட்டிக்கழித்து வருகிறது. சிறிய தேசிய இனங்களின் தன்னாட்சி உரிமை அங்கீகரிக்கப்பட்டு வருவதும், பல சிறிய நாடுகளின் சுதந்திரப் பிரகடனங்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதும் மேற்குலக நாடுகளின் தற்போதைய அரசியல் நிலைப்பாடாக உள்ளதால் தமிழர் பிரச்சினையை மேற்குலக அரங்கிற்கு எடுத்துச் செல்லபிரேமதாசா அரசு அஞ்சுகிறது அத்துடன்கனடா அவுஸ்திரேலியா, சுவிட்சர் (4ஆம் பக்கம் பார்க்க)

### கனடா நிலை குறித்து 'ஐலண்ட்' ஆதங்கம்

(கொழும்பு)

கனடிய மனித உரிமைகள் குழு புலிகளுக்கு எதிராக எதுவுமே தெரிவிக்கவில்லை என அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளதாக 'ஐலண்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கனடாவில் விடுதலைப்புலிகள் அலுவலகமும் ஏனைய வசதிகளையும் பெற்றிருப்பதாகவும் அவர்கள் அங்கு பணம் சேகரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாகவும் அந்த செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### கனடா மனித உரிமைக்குழு

### சுற்றிவளைப்பு சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் 40 ஆம் கிராமத்தை சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் ஒரு தமிழ் பொதுமகனை சுட்டுக் கொன்றுள்ளனர் இன்னும் ஒருவரைக் கைது செய்து முகாமிற்கு கொண்டு சென்றுள்ளனர்.

இந்த சம்பவம் கடந்த 26 ஆம் திகதி இடம்பெற்றது.

### மீனவர் மீது துப்பாக்கி பிரயோகம்

மண்டைதீவுப் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் நேற்றுக்காலை குருநகர் கரைநோக்கி துப்பாக்கி பிரயோகம் செய்தனர். நேற்று அதிகாலை 2.30 மணியளவில் யாழ். குடாக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மீதும் துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

### 'அக்பர்' இன்று திருமலை வரும்

தமிழகத்திலிருந்து இரண்டாவது தொகுதி அகதிகளை ஏற்றிக் கொண்டு (4 ஆம் பக்கம் பார்க்க)

## தெரிவுகுழுத் தீர்மானங்களை அரசாங்கம் நிறைவேற்றும்

## வவுனியாவில் பாரிய சிங்கள குடியேற்றம்

(வவுனியா)

வவுனியா நகரில் தமிழர் நிலங்களிலும், வீடுகளிலும் பாரிய சிங்களக் குடியேற்றத் திட்டமொன்றை இராணுவத்துடன் இணைந்து சிங்கள அரச அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

வவுனியா நகருக்குத் தெற்கே உள்ள தேக்கங்காடு, தோணிக்கல் ஆகிய பகுதிகளிலேயே இக்குடியேற்றத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களை இராணுவ அச்சுறுத்தல்மூலம் வெளியேற்றும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுவதாக தகவல் கிடைத்துள்ளது.

இது விடயத்தில் தமிழ் அரச அதிகாரிகள் மௌனம் சாதித்து வருகின்றனர்.

நூற்றுக்கு மேற்பட்ட சிங்களக் குடும்பங்கள் தற்போது குடியேற்றப்பட்டுள்ளன என்று தகவல் கிடைத்துள்ளது. (தி)

### கிழக்கில் இராணுவ கெடுபிடி; கிராமங்கள் சுற்றிவளைப்பு தமிழர் சித்திரவதை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட மக்களை சிறிலங்கா இராணுவத்தினர்தொடர்ந்தும் தாக்கி வருவதாகவும் கைது செய்து முகாமகளில் அடைத்து துன்புறுத்துவதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. தொடர்ந்து நாட்கணக்காக இராணுவச் சுற்றிவளைப்புக்கு உள்ளாகும் தமிழ் மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

கடந்த 24ஆம் திகதி அதிகாலை 4மணி தொடக்கம் தொடர்ந்து இரு தினங்களாக மட்டக்களப்பு மாவட்டம், பழுகாமம், அம்பிலாந்துறை, (4ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் நேற்று அகோரக் குண்டு வீச்சு

வவுனியா மாவட்டத்தில் நேற்றுக்காலை 8.30 மணியளவில் சிறிலங்கா அரசின் விமானங்கள் குண்டுவீச்சுத் தாக்குதலையும் றொக்கட் தாக்குதல்களையும் மேற்கொண்டன

வவுனியா மாவட்டத்தில் பன்றிக்கெய்தகுளம் பகுதியில் சிறிலங்கா அரசுக்கு சொந்தமான மூன்று சியாமா செட்டி விமானங்களும், உலங்கு வானூர்தி ஒன்றும் அகோரக் குண்டுவீச்சுத் தாக்குதலை மேற்கொண்டன. இத்தாக்குதலின்போது நான்கு குண்டுகளும், 11 றொக்கெட்டுகளும் அடுத்தடுத்து வீசப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் அப்பகுதியில் ஒரு வீடு முற்றாக சேதமடைந்தது மற்றும் சில வீடுகளும் சேதம் மடைந்ததாக தெரியவருகிறது

### குடியிருப்புகள் மீது

தமிழர் பிரச்சினை சமாதானப் பேச்சுக்கள் மூலம் தீர்வு காணப்படவேண்டும் என்றும், அப்படியான சூழ்நிலை ஏற்படும் பட்சத்தில் அரசுக்கும், புலிகளுக்கும் மத்தியில் மத்தியஸ்துவம் வகிக்க தாம் தயாராக இருப்பதாகவும் பல மேற்குலக நாடுகள் விருப்பம் தெரிவித்துள்ளன. நோர்வே, சுவீடன், சுவிட்சர்லாந்து, அவுஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகள் மத்தியஸ்துவ முயற்சிக்கு விருப்பம் தெரிவித்திருந்தன. நோர்வே, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளின் தலைவர்கள் இது தொடர்பாக சிறிலங்கா ஜனாதிபதிக்கு கடிதங்களையும் எழுதியுள்ளனர்.

கனடா அரசாங்கம் தமிழர் பிரச்சினையில் மத்தியஸ்துவம் வகிக்க விரும்புவதாக நேரடியாகவே அறிவித்திருந்தது.

உலக நாடுகளின் இந்த நல்லெண்ண முயற்சிகளை சிறிலங்கா அரசாங்கம் கருத்தில் எடுக்காது தட்டிக்கழித்து வருகிறது. சிறிய தேசிய இனங்களின் தன்னாட்சி உரிமை அங்கீகரிக்கப்பட்டு வருவதும், பல சிறிய நாடுகளின் சுதந்திரப் பிரகடனங்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதும் மேற்குலக நாடுகளின் தற்போதைய அரசியல் நிலைப்பாடாக உள்ளதால் தமிழர் பிரச்சினையை மேற்குலக அரங்கிற்கு எடுத்துச் செல்லபிரேமதாசா அரசு அஞ்சுகிறது அத்துடன்கனடா அவுஸ்திரேலியா, சுவிட்சர்

(4ஆம் பக்கம் பார்க்க)

நேற்று அதிகாலை 2.30 மணியளவில் யாழ். குடாக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மீதும் துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

புறுத்துவதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. தொடர்ந்து நாட்கணக்காக இராணுவச் சுற்றிவளை தொடர்ந்து இரு தினங்களாக மட்டக்களப்பு மாவட்டம், பழுகாமம், அம்பிலாந்துறை,

(4ஆம் பக்கம் பார்க்க)

## கனடா நிலை குறித்து 'ஐலண்ட்' ஆதங்கம்

(கொழும்பு)

கனடிய மனித உரிமைகள் குழு புலிகளுக்கு எதிராக எதுவுமே தெரிவிக்கவில்லை என அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளதாக 'ஐலண்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கனடாவில் விடுதலைப்புலிகள் அலுவலகமும் ஏனைய வசதிகளையும் பெற்றிருப்பதாகவும் அவர்கள் அங்கு பணம் சேகரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாகவும் அந்த செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 'அக்பர்' இன்று திருமலை வரும்

தமிழகத்திலிருந்து இரண்டாவது தொகுதி அகதிகளை ஏற்றிக் கொண்டு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் நேற்று அகோரக் குண்டு வீச்சு

வவுனியா மாவட்டத்தில் நேற்றுக்காலை 8.30 மணியளவில் சிறிலங்கா அரசின் விமானங்கள் குண்டுவீச்சுத் தாக்குதலையும் றொக்கட் தாக்குதல்களையும் மேற்கொண்டன.

வவுனியா மாவட்டத்தில் பன்றிக்கெய்தகுளம் பகுதியில் சிறிலங்கா அரசுக்கு சொந்தமான மூன்று சியாமா செட்டி விமானங்களும், உலங்கு வானூர்தி ஒன்றும் அகோரக் குண்டுவீச்சுத் தாக்குதலை மேற்கொண்டன. இத்தாக்குதலின்போது நான்கு குண்டுகளும், 11 றொக்கெட்டுகளும் அடுத்தடுத்து வீசப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் அப்பகுதியில் ஒரு வீடு முற்றாக சேதமடைந்தது மற்றும் சில வீடுகளும் சேதம் மடைந்ததாக தெரியவருகிறது

# தெரிவுகுழுத் தீர்மானங்களை அரசாங்கம் நிறைவேற்றும்

### -பிரேமதாசா

(புத்தளம்)

வடக்குக்-கிழக்குக் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வொன்றைக் காண்பதற்காக நியமிக்கப்பட்டபாராளுமன்றத் தெரிவுக்குழு சமர்ப்பிக்கும் இனப்பிரச்சினைக்ாகன தீர்வுத் திட்டத்தை அனைத்து பிரிவு மக்களினதும் சம்மதத்துடன்தான் நடைமுறைப்படுத்தப் போவதாக ஜனாதிபதி ஆர். பிரேமநாசா கடந்த சனியன்று புத்தளம் நகர மண்டபத்தில் நடந்த புத்தளம் மாவட்ட ஐ.தே. கட்சிக் கூட்டத்தில் பேசும்போது தெரிவித்தார்.

பல தரப்பினரும் இணைந்து எடுக்கும் ஒரு முடிவாகவும், மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும், தீர்வுத் திட்டம் அமைய வேண்டும் என ஜனாதிபதி வற்புறுத்தினார். இந்த நெருக்கடியைத் தீர்ப்பதற்கு அனைத்துக் கட்சி மாநாடு தன்னாலான முயற்சி எடுத்துவருகிறது. ஒரு தலைப்பட்சமான முடிவை அமுல்படுத்தினால், அது வேறு பல பிரச்சினைகளைத் தோற்றுவிக்கக் கூடும். வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு 1987 இல் ஒரு பக்கமான முடிவொன்றை எடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, அதனால் ஏற்பட்ட அழிவுகளையும், அனர்த்தங்களையும் பலரும் அறிவார்கள். மக்களைக் கலந்தாலோசிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. 'நாடு விலை போகிறது. நம்பிக்கைத் துரோகம் இடம் பெறுகிறது' என்றெல்லாம் குற்றம் சாட்டப்பட்டது. இதன் விளைவாக நாட்டில் தொந்தரவு, துன்பம், ஒழுங்கீனம் ஆகியன ஏற்பட்டன இத்தகைய ஒரு சூழ்நிலை மீளவும் தலைதூக்க அரசு இடமளிக்காது என்றார் அவர்.

## கனடா மனித உரிமைக்குழு மட்டு. பலரைச் சந்தித்தது

(கொழும்பு)

கனடாவிலிருந்து சிறிலங்காவிற்கு விஜயம் செய்துள்ள மனித உரிமைகள் விசாரணைக்குழு கடந்த சனியன்று மட்டக்களப்பு, வவுனியா இராணுவ இணைப்பதிகாரிகளை சந்தித்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அவர்கள் மட்டக்களப்பு, வவுனியா பகுதியில் இராணுவ அடாவடித்தனங்கள் குறித்து விசாரித்து அறிந்து கொண்டதாக தெரியவருகிறது. அத்துடன் மட்டக்களப்பு, வவுனியா பகுதி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரையும் மனித

(4 ஆம் பக்கம் பார்க்க)

## குடியிருப்புகள் மீது எறிகணை வீச்சு

(பொன்னாலை)

காரைநகரில் உள்ள சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து சுழிபுரம், பொன்னாலை, மூளாய் ஆகியபொது மக்கள் வாழும் பகுதிகளை நோக்கி எறிகணைத் தாக்குதல் நடாத்தப்பட்டிருக்கின்றது.

நேற்று முன்தினம் நள்ளிரவும், நேற்று அதிகாலையும் இத்தாக்குதல் நடாத்தப்பட்டது. இத்தாக்குதலினால் பெரியளவிலான சேதம் எதுவும் ஏற்படவில்லை. எனினும் பொதுமக்கள் சிலர் பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம் பெயர்ந்துள்ளனர். (க)

## தொண்டா திட்டத்தை முஸ்லிம்கவுன்சில் ஆராயும்

(கொழும்பு)

இனப்பிரச்சினைத் தீர்விற்கு அமைச்சர் தொண்டமான் சமர்ப்பித்துள்ள யோசனைகளில் முஸ்லிம்கள்சம்பந்தமான கருத்துக்களை முஸ்லிம் கவுன்சில் ஆராயவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதியூதீன் முகமட் தலைமையில் முஸ்லிம் கவுன்சில்கூடி இதனை ஆராயவுள்ளதாக கூறப்படுகிறது.

## கடத்தலுக்கு உதவிய கோப்ரல், பொலிஸ் கைது

(வவுனியா)

வவுனியா நகரில் தமிழ்ப் பொதுமகன் ஒருவரிடம் பெருந்தொகையான பணத்தைப் பெற்றுக் கொண்டு மின்கலப் பொருள்களை (பற்றி) வடபகுதிக்கு அனுப்பி வைக்க முயன்ற இராணுவ கோப்ரல் ஒருவரும் சிங்களப் பொலிஸார் ஒருவரும் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சமீபத்தில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

பணத்தைப் பெற்றுக் கொண்ட குறிப்பிட்ட இருரும் வவுனியா மன்னார் வீதி வழியாக வவுனியா கிராமப்புறம் நோக்கிச் செல்வதற்கு மகேசன் என்பவருக்கு அனுமதி வழங்கினார்களாம்.

இடையில் உள்ள வேறொரு

(4ஆம் பக்கம் பார்க்க)

### தொண்டாவிற்கு எதிரான

## பேரினவாதத்தின் கூச்சல் தீர்விற்கு முட்டுக்கட்டை

### - மஜீத்

(கொழும்பு)

தொண்டமானின் முன்மொழிவுகளுக்கு எதிராக பேரினவாத சக்திகள் போர்க்கொடி தூக்கியுள்ளமை தீர்வு முயற்சிகளுக்கு தடை போடும் முயற்சியே என பாராளுமன்றத்தில் ஐ.தே.க. எம். பியான அப்துல் மஜீத் தெரிவித்தார்.

அவசரகால சட்ட நீடிப்பு தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில்,

நாடும், மக்களும் எத்தனையோ நெருக்கடிகளை அனுபவித்து விட்ட போதிலும் இன்னமும்கூட தேசிய பிரச்

(4ஆம் பக்கம் பார்க்க)

# அடக்குமுறைக்குஎதிராய் மாபெரும்மறியல்போராட்டம்

## 2000 பொதுஸ்தாபனங்கள் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள்மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட கண்மூடித்தனமான இராணுவ நடவடிக்கைகள், தமிழ் மண்ணை ஆக்கிரமித்த இராணுவத்தை வெளியேற்றக் கோரியும், மாணவர்களின் கல்விப் பாதிப்பையும், பாடசாலைகள் மீதான இராணுவ விமானத் தாக்குதல்கள், பொருளாதாரத் தடைகள், அழுத்தங்கள் தமிழ்ப்பகுதிக்கு ஒதுக்கப்பட்ட நிவாரண உதவிகளை உரிய முறையில் வழங்காமை தொழில் பாதிப்புற்ற மக்களினதும் இடம்பெயர்ந்த மக்களின் அன்றாட வாழ்க்கை பிரச்சினைகளை முன்வைத்து குடாநாடு பூராகவும் மாபெரும் ஆர்ப்பாட்ட மறியல் போராட்டங்களை நடத்துவதற்கு குடாநாட்டிலுள்ள 2000 க்கு மேற்பட்ட பொதுஸ்தாபனங்களின் பிரநிதிகள் கலந்துகொண்டு தெரிவு செய்யப்பட்ட குழுவினால் தீர்மானம் எடுக்கப்பட்டது.

எதிர்வரும் 5 ஆம் திகதி புதன்கிழமை யாழ். மாவட்டத்திலுள்ள சகல அரச, பொதுஸ் தாபனங்கள், பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள் மற்றும் தொழில் தாபனங்கள் முழுமையாக மூடப்பட்டிருப்பதுடன் சகல மக்களும் தமது பகுதிகளிலிருந்து பதாதைகள், சுலோகங்கள் ஏந்திய வண்ணம் ஊர்வலமாக வந்து யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் பணிமனை முன்பாக மறியல் போராட்டத்தை நடாத்தி மேற்படி கோரிக்கைகள் அடங்கிய மகஜரை அரச அதிபரிடம் சமர்ப்பிப்பார்கள். கோரிக்கைகள் இரண்டுவார காலத்திற்குள் நிறைவேற்றப்படாத பட்சத்

(4ஆம் பக்கம் பார்க்க)

## அரச உத்தியோகஸ்தர்களே இல. திரும்ப அவதியாம்

### இந்திய அதிகாரி தகவல்

(சென்னை)

இலங்கை அரசு ஊழியர்களாக இருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகள்தான் இலங்கைக்குத் திரும்ப அவசரப்படுகிறார்கள். குறிப்பிட்ட தினத்துக்குள் போய் சேராவிடில் வேலை பறிபோய்விடும் எனக் கூறும் அவர்கள் அவசரப்பட்டார்கள் அதனால்தான் அவர்களுக்கு வசதியாகக் கப்பலை ஏற்பாடு செய்து கொடுத்துள்ளோம் என்று இந்திய அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை தாயகம் திரும்ப விருப்பம் தெரிவித்துள்ள

(4ஆம் பக்கம் பார்க்க)

### தொண்டாவிற்கு எதிராய்

## இனவாதம் கக்காதீர்; ஆபத்தில் முடியும்

(கொழும்பு)

1983 இல் இடம் பெற்றது போன்ற வன்செயல்கள் மீண்டும் ஒருமுறை இலங்கையில் இடம்பெறுமானால், உலகின் எந்த நாடும் எமக்கு உதவ முன்வராது. இது பெரும் பொருளாதார முடையில் சிக்கியுள்ள எமது நாட்டைப் பெரிதும் பாதிக்கும். ஆதலால் நாட்டுப் பற்றுள்ளதாகக் கூறும் எவரும் முதலில் மலையக மக்களுக்கும், தொண்டமானுக்கும் எதிராக இனவாதம் கக்குவதை உடனடியாக

(4ஆம் பக்கம் பார்க்க)

### வீதி ஒழுங்கு மீறின்

## ஸ்தலத்தில் வைத்து தண்டம் அறவிட முடிவு

எதிர்வரும் முதலாம் திகதி முதல் வீதி ஒழுங்கு முறைகளை கடைப்பிடிக்காமலும், சமாந்தரமாகவும் வீதிகளில் பயணம் செய்யும் துவிச்சக்கர ஓட்டுநர்களிடமிருந்து ஸ்தலத்தில் வைத்து தண்டம் (குற்றப்பணம்) அறவிடப்படவிருக்கிறது.

வீதிப் போக்குவரத்து ஒழுங்குபடுத்துவதற்கும், விபத்துக்களைத் தவிர்த்துக் கொள்ளும் முகமாகவும் தமிழீழக் காவல் துறையினர் மேற்படி நடவடிக்கையில் இறங்க உள்ளனர்.

கடந்த சில காலமாக இவ்வாறு வீதி ஒழுங்குகளை மீறும் துவிச்சக்கரவண்டி ஓட்டுநர்கள் காவல்துறையினரால் எச்சரிக்கப்பட்டும், வீதி ஒழுங்கு முறைகள் பற்றி அறிவுறுத்தப்பட்டும் வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 90 கோடி டாலர் உதவி சிறிலங்கா கோருமாம்

(கொழும்பு)

உதவி வழங்கும் நாடுகளிடம் இருந்து சிறிலங்கா அரசு தொண்ணூறு கோடி டாலர் உதவியினை கோரும் என நிதியமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 7 ஆம் திகதி பாரிஸில் நடைபெற இருக்கும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் கூட்டத்திலேயே சிறிலங்கா அரசு இந்த உதவியை கோரவுள்ளது.

இந்த உதவியானது கடந்த வருடம் சிறிலங்காவிற்கு வழங்கப்பட்ட தொகையிலும் பத்துக்கோடி அமெரிக்க

(4 ஆம் பக்கம் பார்க்க)

# மட்டு. அம்பாறையில் கைதான 5000 இளைஞர் பற்றி தகவலில்லை

## 7000 தமிழர் படுகொலை செய்யப்பட்டனர்

(அலுவலக நிருபர்)

கடந்த இருபது மாதங்களில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினராலும் ஊர்காவல்படையாலும் ஏழாயிரத்திற்குமேற்பட்டோர் சொல்லப்பட்டதுடன் ஆறாயிரத்திற்குமேற்பட்ட இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் ஐயாயிரம் பேர் பற்றிய விபரங்களை வெளியிட இராணுவ அதிகாரிகள் மறுப்புத் தெரிவிப்பதாக அங்கிருந்து வந்த பெண்மணி ஒருவர் எமக்குத் தெரிவித்தார்.

1990 ஆம் அண்டு ஆனி மாதம் புலிகள் - இராணுவம் மோதல் ஆரம்பமாகிய போது இராணுவத்துடன் இணைந்து பிரேமதாசாவின் தனிப்படையான பச்சைப்புலிகள் என்ற அயுதக் குழுக்கள் மிகவும் கொடூரமான முறையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் தமிழ்ப் பொதுமக்களை அடித்து, வெட்டி கொலை செய்து அடாவடித் தனங்களில் ஈடுபட்டதும் தெரிந்ததே.

இந்நடவடிக்கையின் போது இக் குழுவினால் ஐயாயிரம் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டனர்.

ஆனால் இன்றுவரை இவர்கள் பற்றிய தகவல்களைப் பெற முகாமிற்குச் சென்றால் 90 ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்டவர்கள் எங்கு வைக்கப்பட்டுள்ளார்கள் என்றோ அவர்களுக்கு என்ன நடந்ததென்பது பற்றியோ தமக்கு எதுவுமே தெரியாது எனவும், இவர்கள் யாரால் கைது செய்யப்பட்டார்கள் என்பது பற்றிக்கூட தெரியாது என இராணுவ அதிகாரிகள் கூறுவதாகவும் அப்பெண்மணி தெரிவித்தார். இராணுவ பிடிக்குள் சிக்கியுள்ள பகுதிகள் இரண்டு தினங்களுக்கு ஒருதடவை இராணுவத்தால் சுற்றி வளைக்கப்பட்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டு முகாம்களுக்கு கொண்டு செல்லப்படுவதாகவும் கூறப்படுகிறது.

### வெளியேறத்தடை:

இராணுவத்தின்கட்டுப்பாட்டிற்குள் உள்ள பிரதேசங்களில் வாழும் தமிழர்கள் மாலை ஆறுமணிக்குப்பின் வீடுகளை விட்டு வெளியேற இராணுவம் தடை விதித்துள்ளது. இவ்வாறு வெளியேறுவோர் பலமாகத் தாக்கப்பட்ட பின் காலை வரை மின்கம்பத்தில் கட்டிவைக்கப் படுகின்றனராம். அவசர அலுவல்களுக்காக வெளியேற வேண்டியிருப்பின் தீப்பந்தத்துடன் மட்டுமே வெளியேறலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

### விசேட அடையாள அட்டை:

இராணுவ ஆக்கிரமிப்புக்குட்பட்ட பகுதிகளில் வாழும் பதினைந்து முதல் முப்பது வயதுக்குட்பட்ட யுவதிகளுக்கும் முப்பது முதல் நாற்பது வயதுக்குட்பட்ட ஆண்களுக்கும் விசேட அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா இராணுவத்தினரால் வழங்கப்பட்ட இந்த அடையாள அட்டையைக் கொண்டே இவர்கள் வீடுகளை விட்டு வெளியேற வேண்டும் என இராணுவத்தால் பணிக்கப்பட்டுள்ளனர். இந்த அட்டையின்றி வெளியேறுவோர் கைது செய்யப்படுகின்றனர்.

### உறவாடத்தடை:

வீட்டிற்கு வரும் உறவினர்கள் பற்றி அருகில் உள்ள இராணுவ முகாமிற்கு மூன்று மணித்தியாலத்திற்குள் தகவல் வழங்க வேண்டும். தகவல் கொடுக்கத் தவறின் குடும்பத்துடன் முகாமிற்குக் கொண்டு செல்லப்படுகின்றனர். அத்துடன் வீட்டுக்கு வரும் உறவினர்களுக்கு உணவுகூட வழங்க முடியாத நிலை இருப்பதாகவும் இராணுவத்தினரின் கெடுபிடி அதிகமாக இருப்பதால் ஒருவர் வீட்டிற்கு மற்றவர் செல்வதை தவிர்த்து வருகின்றனர்.

தமிழரின் பாரம் பரிய பிரதேசமாக இருந்த பல கிராமங்கள் இராணுவம் மற்றும் ஊர்காவல்படையினரால் முற்றாக அழிக்கப்பட்டு அங்கில் இருந்த தமிழ்ப் பாடசாலை சிங்கள மகாவித்தியாலயமாக மாற்றப்பட்டு அங்கு தனிச் சிங்கள மொழியில் கல்வி புகட்டப்படுகிறது. இதனால் அங்கு பயிலும் ஒருசில தமிழ் மாணவர்களும் சிங்கள மொழியில் கல்வி கற்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

### ஊர்காவல்படை காவல்:-

முஸ்லிம்கள்- தமிழர்கள் இணைந்து வாழும் கிராமங்களில் முஸ்லிம் ஊர்காவல் படையினர் தினமும் காவலில் ஈடுபடுவதாகவும் இவர்கள் ஆயுதபாணிகளாக நடமாடுவதாகவும் தெரிய வருகிறது.

### உணவுப் பொருள்களுக்கு கட்டுப்பாடு:-

அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் பகுதியில் உள்ள இராணுவ முகாம் ஒன்றிற்குள் ஒரு பலசரக்கு கடை நடாத்தப்படுவதாகவும் மக்கள் அங்கு சென்றே பொருள்களை வாங்க வேண்டும் என இராணுவத்தால் நிர்ப்பந்திக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் அங்கு மட்டுப்படுத்தப் பட்ட அளவிலேயே பொருள்கள் விநியோகிக்கப்படுகின்றன எனவும் அப்பெண்மணி தெரிவித்தார். (ச.க)

### பாலர்கல்வி கூடம்

லெப்.கேணல் சந்தோசம் நினைவாக பாலர் கல்விக் கூடம் ஒன்றை அரியாலை அருணோதயா சனசமூகநிலையத்தினர் சென்ற திங்கட் கிழமை இரவு மேற்படி சனசமூக நிலையத்துக்கு அருகில் திறந்து வைத்தனர் (ε4)


### வரி விளம்பரம்

A/L இரசாயனம்

A/L 9 இரசாயனம் (Basic) ஆரம்பம்: 1-2-92 சனி ஞாயிறு 6-30 a.m. ஆசிரியர் சதீஸ், 108, பிறவுண வீதி, யாழ்ப்பாணம். (2157)



## நீமியா உரம்

வேம்பின் ஆதாரம்,

பயிர் பாதுகாப்புக்கும் மண்வளத்திற்கும் கூடுதல் விளைச்சலுக்கும் சகல பயிர்களுக்கும் முந்தையோர் கண்டறிந்தது.

உள்ளூர் மூலவளம் கொண்டு தயாரிக்கப்பட்டது.

பாவித்தவர்கள் பயனடைந்ததால் மீண்டும் மீண்டும்

நீமியா உரத்தையே

நாடுகிறார்கள்.

கிலோ விலை 15/- மட்டுமே!

20கிலோ பைக்கற்றிலும் கிடைக்கிறது.

அண்ணா கோப்பிக் கடைகளிலும் விற்பனையாகின்றது



யாழ். பல்கலைக்கழகம்

### பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1992 - 02 - 28 ஆம் திகதி வரைவிண்ணப்பங்கள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. நுண்ணுயிரியலில் உதவிவிரிவுரையாளர்/ தற்காலிக உதவி விரிவுரையாளர்.
2. மிருக விஞ்ஞானத்தில் தற்காலிக உதவி விரிவுரையாளர்.

சம்பள அளவுத்திட்டம்:

உதவி விரிவுரையாளர்:

ரூபா 3,900/- மாதமொன்றுக்கு (நிலையானது) ஓராண்டு திருப்திகரமான சேவையை நிறைவு செய்த பின்னர் துணைவேந்தர் ரூபா 4,500 - 10x200-6,500/- (மாதமொன்றுக்கு) சம்பள அளவுத்திட்டத்தில் 4 500/- சம்பளப் படியில் வைப்பார்.

தற்காலிக உதவிவிரிவுரையாளர்:-

ரூபா 3,900/-மாதமொன்றுக்கு (நிலையானது)

1. மேற்நறிந்த பதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்களையும் இதரவிபரங் களையும் இப் பல்கலைக்கழக தாபனக்கிளையின் உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.
2. விண்ணப்பப் படிவங்களை தபாலில் பெற விரும்புவோர் விண்ணப்பப்படிவங்களிற்கான வேண்டுகோளுடன் 23x10 ச.மீற்றர் அளவுடைய சுய முகவரியிட்டு முத்திரை ஒட்டப்பட்ட கடித உறை இணைத்தனுப்பப்படல் வேண்டும்,
3. அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் என்பனவற்றில் உள்ளவிண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.
4. ஒரு பதவிக்கு மேல் விண்ணப்பிக்க விரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்
5. தெரிவு செய்யப்படும் அபேட்சகர்களின் சிறப்புத் தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத்தில் கொண்டு சம்பள அளவுத் திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

பதிவாளர்

யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்,
1992-01-27 (சி, 3862)


### பொலநறுவையில் தமிழர் சுட்டுக்கொலை

பொலநறுவை மாவட்டத்திலுள்ள அரணகம்வில என்னும் இடத்தில் கே.சிதம்பரப்பிள்ளை என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். கொலைஞர்கள்யார் என்பது கண்டுபிடிக்கப்படவில்லை எனவும் திம்புலகல மலைப்பாறையொன்றில் அவரது சடலம் காணப்பட்டதாகவும் அரணகம்வில பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

### கருத்தரங்கு

யாழ். பல்கலைக் கழக புவியியற் கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள கருத்தரங்குத் தொடர் மூன்றில் ''கிராமிய அபிவிருத்தி'' அணுகுமுறைகளும் பிரச்சினைகளும் என்ற தலைப்பில் பேராசிரியர் நா. பாலகிருஷ்ணன் உரையாற்றவுள்ளார்.

இக்கருத்தரங்கு புவியியல் விரிவுரை மண்டபத்தில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறும்.

### பழுதுபார்க்க கூடியதாம்

சென்னையில் விபத்துக்குள்ளான விமானத்தை பழுதுபார்க்க முடியுமென போயிங் விமானக் கம்பனி அறிவித்துள்ளது.

இந்த விமானம் பழுதுபார்க்க முடியாத அளவிற்குசேதம் அடைந்துள்ளது என ஞாயிற்றுக்கிழமை கொழும்புப் பத்திரிகை ஒன்றில் வெளியான அறிக்கை முற்றிலும் பிழையானது என்றும் எயர்லங்கா நிறுவனம் தெரிவித்துள்ளது.


இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,

யாழ்ப்பாணக் கிளை

உதவி தாதியாளர்

## பயிற்சி ஆசிரியர்

மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தாதிகள் பயிற்சித் தகைமைச் சான்றிதழ்உள்ள அனுபவம் உள்ளோர், யாழ்ப்பாண மாவட்டத்தில் எவ்விடத்திலும் சென்று பயிற்சி அளிக்கக் கூடியவர்கள் 07-02-92க்கு முன்னதாக விண்ணப்பிக்கவும். 08-02-92 பிற்பகல் 3-00 மணிக்கு நேர்முகப் பரீட்சை எமது பணிமனையில் நடைபெறும்.

-கௌரவ செயலாளர்

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
28-01-92 (சி/3864)



## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட் யாழ்ப்பாணம்

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

❋ மாலை நேர வகுப்புக்கள்
(மாலை 3மணி முதல் 6மணி வரை)

## நீமியா உரம்

வேம்பின்ஆதாரம்,

பயிர் பாதுகாப்புக்கும் மண்வளத்திற்கும் கூடுதல் விளைச்சலுக்கும் சகல பயிர்களுக்கும் முந்தையோர் கண்டறிந்தது.
உள்ளூர் மூலவளம் கொண்டு தயாரிக்கப்பட்டது.

பாவித்தவர்கள் பயனடைந்ததால்

மீண்டும் மீண்டும்

நீமியா உரத்தையே

நாடுகிறார்கள்.

கிலோ விலை 15/- மட்டுமே!

20கிலோ பைக்கற்றிலும் கிடைக்கிறது.

அண்ணா கோப்பிக் கடைகளிலும் விற்பனையாகின்றது

**மில்க்வைற் தயாரிப்பு**

(சி-3852)


றனர்.

**உறவாடத்தடை:**

வீட்டிற்கு வரும் உறவினர்கள் பற்றி அருகில் உள்ள இராணுவ முகாமிற்கு மூன்று மணித்தியாலத்திற்குள் தகவல் வழங்க வேண்டும். தகவல் கொடுக்கத் தவறின் குடும்பத்துடன் முகாமிற்குக் கொண்டு செல்லப்படுகின்றனர். அத்துடன் வீட்டுக்கு வரும் உறவினர்களுக்கு உணவுகூட வழங்க முடியாத நிலை இருப்பதாகவும் இராணுவத்தினரின் கெடுபிடி அதிகமாக இருப்பதால் ஒருவர் வீட்டிற்கு மற்றவர் செல்வதை தவிர்த்து வருகின்றனர்.

தமிழரின் பாரம் பரிய பிரதேசமாக இருந்த பல கிராமங்கள் இராணுவம் மற்றும் ஊர்காவல படையினரால் முற்றாக அழிக்கப்பட்டு அங்கிருந்த தமிழர்கள் விரட்டியடிக்கப்பட்டபின் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டுள்ளனர். பானமை என்ற இடத்

## பாலர்கல்வி கூடம்

லெப்.கேணல் சந்தோசம் நினைவாக பாலர் கல்விக் கூடம் ஒன்றை அரியாலை அருணோதயா சனசமூகநிலையத்தினர் சென்ற திங்கட்கிழமை இரவு மேற்படி சனசமூக நிலையத்துக்கு அருகில் திறந்து வைத்தனர் (ε4)

இதரவிபரங்களையும் இப் பல்கலைக்கழக தாபனக்கிளையின்உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

2. விண்ணப்பப் படிவங்களை தபாலில் பெற விரும்புவோர் விண்


## விக்னா கல்வி நிறுவனம்

5², ஸ்ரான்லி றோட் யாழ்ப்பாணம்

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

O/L

❊ மாலை நேர வகுப்புக்கள் (மாலை 3மணி முதல் 6மணி வரை)

❊ பகல் நேர வகுப்புக்கள் (காலை 8 மணி முதல் மாலை 3 மணி வரை)

❊ சனி, ஞாயிறு வகுப்புக்கள் (காலை 8 மணி முதல் பி. ப. 2 மணி வரை)

புதிய பிரிவுகள்

**ஆரம்பம்: 1 - 2 - 92**

★ எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்களின் ஒன்றிணைந்த போதனை.

★ கடமை, கட்டுப்பாடுடன் நடாத்தப்படும்.

(சி-3863)



## புதிய உயர் கல்லூரி

**(New College of High Studies)**

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

**93** *G.A.Q* பேராதனை

புதிய பிரிவு ஆரம்பம் 1.2-92

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பப்படிவங்களை எம்மிடம் பெற்றுக் கொள்ளவும்.

இதற்கான விண்ணப்ப முடிவு திகதி

31.01.1992

திருமதி S. அருள்நங்கை
- நிர்வாகி -

(சி 3860)



உதவி தாதியாளர்

## பயிற்சி ஆசிரியர்

மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தாதிகள் பயிற்சித் தகைமைச் சான்றிதழ் உள்ள அனுபவம் உள்ளோர், யாழ்ப்பாண மாவட்டத்தில் எவ் விடத்திலும் சென்று பயிற்சி அளிக்கக் கூடியவர்கள் 07-02-92க்கு முன்னதாக விண்ணப்பிக்கவும். 08-02-92 பிற்பகல் 3-00 மணிக்கு நேர்முகப் பரீட்சை எமது பணிமனையில் நடைபெறும்.

-கௌரவ செயலாளர்

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

28-01-92 (சி/3864)


## நினைவு கூருகின்றோம்...

**1992-01-29**

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் பரப்புக்கடந்தானில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச் சாவெய்திய

**உமாகாந்** [பெர்னாந்து நீக்கிலாஸ்- காத்தான்குளம், மன்னார்]

இதே ஆண்டு வீரச்சாவெய்திய

★ **ஆசீர்வாதம் அருளப்பு** [மூதூர்]

1987 ஆம் ஆண்டு பருத்தித்துறையில் மிதிவெடியில் சிக்கியதால் எம்மைப்பிரிந்த

**பவுண்** [மா. துரைசிங்கம் - நாவலடி, உடுப்பிட்டி]

1989 ஆம் ஆண்டு முல்லைத்தீவு அளம்பில் பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தங்கபுரத்தைச் சேர்ந்த இளைஞன்.

1991 ஆம் ஆண்டு திருக்கோணமலை முந்திரிகைக் குளம் முகாமிலிருந்து சாம்பன் குளம் முகாமிற்குச் சென்று கொண்டிருந்த சிறிலங்காப் படையினருடன் ஏற்பட்ட மோதலின் போது வீரச்சாவெய்திய

**2-ம் லெப். முரளி** [பாலசுப்பிரமணியம் செல்வகுமார் - உப்புவெளி, திருக்கோணமலை]

**சுபேசன்** [முகுந்தன் - தொண்டமானாறு]

ஆகியோரை இந்நாளில்

நினைவு கூருகின்றோம்

★ மேற் குறிப்பிட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**விடுதலைப் புலிகள்**

(சி/3858) **மக்கள் முன்னணி**

| 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி | 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி |
| --- | --- |





| லெப். நிசாந்தன் (செல்லையா அன்பழகன்) | | வீரவேங்கை உசாந்தன் (செல்லையா உதயகுமார்) | |
| --- | --- | --- | --- |
| வீரஜனனம் | வீரச்சாவு | வீரஜனனம் | வீரச்சாவு |
| 16 . 12 . 1968 | 3 . 8 . 1990 | 6 . 11 . 1973 | 30 . 01 . 1991 |

எல்லைகளை மீட்டெடுத்து
எம் நிலத்தைக் காப்பதனால்
தொல்லைகளைத் தொலைக்கவென
துடித்தெழுந்த சகோதரரே
வெல்லும் இந்த யுத்தம்
வாழும் உங்கள் வீரம்
சொல்லும் நும் பெயர்கள்
துணிவுதனை ஊட்டும்!

மணற்பகுதி,
புத்தூர். - குடும்பத்தினர்

(3859)

## சிந்தனைக்கு

பிறர் தவறுகளுக்கு சமாதானங்கள் சொல்லலாம். ஆனால், உன் தவறுக்கு ஒரு போதும் சமாதானம் தேடாதே.

— புபிலியஸ் ஸைரஸ்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 29-01-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 05

# சுதந்திரக் கட்சியின் பங்கு குறைந்ததல்ல

"இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண அரசாங்கம் நியமித்துள்ள பாராளுமன்றத் தெரிவுக் குழுவிலிருந்து சுதந்திரக் கட்சி வெளியேற வேண்டும்" என சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களில் ஓர் பகுதியினர் கட்சித் தலைமையைக் கோரியுள்ளனர். இதேவேளை "இன்னொருவரின் தலைவலியை நாம் ஏன் ஏற்க வேண்டும்" என சுதந்திரக்கட்சி எம்.பியான ரிச்சாட் பத்திரான பாராளுமன்றத் தெரிவுக்குழுக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சிக்குள் எழுந்துள்ள இம் முரண்பாடு ஒரு புதிய விடயமல்ல. தொண்டமானின்தீர்வுத் திட்டம் தொடர்பாக முதலில் மௌனமாக இருந்த சிறிலங்கா சுதந்திரக்கட்சி பின்னர் அதனை நிராகரித்தது. பேரினவாதசக்திகளின் குகைகளாகவுள்ள இக் கட்சிகளில் இவ்வாறான ஒரு கோரிக்கை எழாவிட்டால் தான் ஆச்சரியப்படத்தக்க ஒன்றாக இருந்திருக்கும். ஆனால், பாராளுமன்றத் தெரிவுக் குழுவிற்கு ஐ தே. கட்சியே தனது தீர்வுத்திட்டத்திற்கான யோசனைகளை முன் வைக்காத போது இதில் தனிப்பட்ட ரீதியில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் குறை கூறி விடுவதில் பயனேதும் இல்லை.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் சரி, ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியும் சரி, கடந்த காலம் முழுவதும் இனவாதம் பேசியே வாக்குவேட்டையில் இறங்கியவர்கள். அதன் மூலம் ஆட்சிக்கு வந்தவர்கள். இன்று, இனவாதத்தைக் கைவிடுதல் என்பது இயலாத காரியமாகத்தான் இருக்கும். அத்தோடு ஒரு கட்சி கைவிட்டால் மற்றக் கட்சியும் கைவிடும் என்பதற்கும் உத்தரவாதம் எதுவுமில்லை. இந்நிலையில், இக்கட்சிகளிடம் இருந்து எதிர்பார்ப்பதற்கு ஒன்றுமில்லை.

அத்தோடு, ஆளும்கட்சிக்கு எதிர்க்கட்சிகள் ஒத்துழைக்கவேண்டும்; அரசாங்கத்தை செம்மையாக வழி நடத்துவதே எதிர்க்கட்சிகளின் கடப்பாடு என்பன போன்ற ஜனநாயகக் கோட்பாடுகளும் சிறிலங்காவில் இதுவரை கடைப்பிடிக்கப்படவில்லை. ஆளும் கட்சிக்கு எதிர் என்பதே எதிர்க்கட்சிகளின் கோட்பாடாகும். இதே போன்று ஆளும் கட்சிகளும் எதிர்க் கட்சிகளை எந்தவிதத்திலும் அனுசரித்துப் போவதும் இல்லை. இந்நிலையில், இனப்பிரச்சினைத் தீர்விற்கு ஐ. தே. கட்சி சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பது என்பதும், அதன் உதவி கிட்டும் என எண்ணுவதும் வேடிக்கையான தொன்றாகும்.

ஆனால்' ரிச்சாட் பத்திரான குறிப்பிட்டுள்ளதுபோல் இலங்கைத்தமிழரின் பிரச்சினை சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு இன்னொருவரின்

# 'பூட்டானில் புயல் உருவாகின்றது'

கடந்த மாதம் பூட்டான் மன்னர் ஜிஸ்மேசிஸ்யே வாஸ்சுக், சார்க் மாநாட்டில் கலந்து கொள்ளாமல் பயணத்தை ஒத்தி வைத்தபோதுதான் அவரது சொர்க்கத்தில் ஏதோ கோளாறு என்று வெளி உலகிற்கு முதன் முதலாகத்தெரிய வந்தது. பிரச்சினை முளைத்தது உள்நாட்டிலேயேதான். தான் நாட்டில் இல்லாத சமயத்தில்' பயங்கரவாதமும், பேரணிகளும்" பூதாகாரமாகி விடும் என்று பயந்த மன்னர் நாட்டை விட்டு வெளியே சென்றாலும் கூட அவைகள் குறைகிற வழியைக் காணோம்.

கடந்த மூன்று வருடங்களில் மன்னராட்சிக்கு எதிரான போராட்டம் உக்கிரமாயிற்று. தெற்கு பூட்டானில் நடந்து வரும் இனக்சலவரத்தில் வன்முறை அதிகரித்தது. இது தான் கண்டபலன். அரண்மனை தர்பாரில் இருக்கும் தீவிரப்போக்கு கொண்டவர்கள் அடக்குமுறையை கட்டவிழ்த்து விட்டதையடுத்து வந்து குடியேறிய நேபாளிகள் மீதான வெறுப்பு அதிகரித்தது. ஆனால் இப்போது மன்னருக்குக் கிடைத்திருக்கும் மிக மோசமான செய்தி கோலாப் என்ற தெற்கு பூட்டானைச் சேர்ந்த நேபள வம்சாவழியினர் வலுக்கட்டாயத்தால் சாரி சாரியாக ஓட்டம் பிடிக்கிறார்கள் என்பதுதான். இவர்கள் எல்லாம் நேபாள நாட்டிற்கு அடித்து விரட்டப்படுகிறார்கள்.

இதுவரை உள்நாட்டுப் பிரச்சினையாக இருந்து வந்தது போய் விஷயம் பூட்டான் எல்லைக்கு வெளியேயும் பரவி வரும் வேளையில் துணைக் கண்டத்தில் முதன்மையான நாடான இந்தியா மன்னரின் கவலைகள் அதிகரித்துக் கொண்டே போவதை எச்சரிக்கையுடன் கவனித்து வருகிறது. தான் ஒரு பொறியில் வகையாக மாட்டியிருப்பதை மன்னர் ஒக்டோபரில்தான் உணர்ந்தார். தன்னால் இரண்டு வருடங்களுக்குள் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்பதால்தான் பதவியை விட்டு விலகுவதாகச் சொல்லி தேசிய சட்டமன்றத்தை மன்னர் அதிர வைத்தார். ஆனால் தற்போதைக்கு தீர்வு என்பது கானல் நீர் ஆகியிருக்கிறது.

முப்பத்தைந்து வயதான வாஸ்சுக் ஒரு சமரச அணுகுமுறையை நாடினாலும் தீவிரப் போக்கில் போகிறவர்கள் தாஷிகோ ஜோஸ் என்று திம்புவில் உள்ள ராஜதந்திரிகள் கருதுகிறார்கள். நேபாளத்தில் ஜனநாயக இயக்கம் மன்னராட்சியை ஒதுக்கியது மாதிரி இங்கேயும் நடக்கும் என்று அவர்கள் அஞ்சுகிறார்கள்.

## நேபாளிகளை ஓட விரட்டுகின்றது

## பூட்டானின் றோயல் இராணுவம்

இவர்களின் சொற்படி மன்னர் அரசு "சட்ட விரோதமாக" நுழைந்த நேபாள குடியேற்ற வாசிகளை வெளியேறச் சொல்லியிருக்கிறது; ஜனநாயக ஆதரவு பூட்டான் மக்கள் கட்சியை (BPP) தடை செய்து ஐந்து தெற்கு மாவட்டங்களைகலவரப் பகுதிகளாக அறிவித்திருக்கிறது.

இந்தியாவைக் கவலை கொள்ள வைக்கும் அம்சங்கள் இவை. முதலாவதாக இந்த இமயப்பகுதி அரசோடு இந்தியா ஒரு சமாதான ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம் நடத்தி வருகிறது. அங்கே நடக்கும் கொந்தளிப்பினால் தன்னுடைய தொடர்புகள் சீர்கெடுவதை இந்தியா விரும்பவில்லை.

இரண்டாவது பூட்டானுக்கு கிடைத்திருக்கும் வெளிநாட்டு உதவிகளில் இந்தியாவின் பங்கு நாற்பது சத வீதம். ஆனால் இப்போது உதவித் தொகையெல்லாம் தெற்கில் அரசின் பாதுகாப்பை வலுப்படுத்தவே பயன்படப் போகிறது என்று திம்புவிற்கு விஜயம் செய்த ஒரு சர்வதேச வங்கி பிரமுகர் தெரிவித்தார். ஆனால், தலைநகரிலுள்ள இந்திய தூதர்கள் எச்சரிக்கையுடனிருக்கிறார்கள். அதிகம் போனால் "பூகோளம் சார்ந்த அரசியலின் நிதர்சனங்களை பூட்டான் சந்திக்கும்" என்று மட்டும் தெரிவிக்கிறார்கள்.

நாடு தொடர்ந்து கூட்டுப் புழுவாய் இருந்து வர முடியாது; மன்னராட்சி என்றென்றைக்குமாய் நீடிக்க முடியாது என்று பூட்டானின் பாதுகாப்பு அமைச்சக அதிகாரி குறிப்பிடுகிறார். அதே வேளையில் "நாங்கள் இன்னும்ஜனநாயகத்திற்கு தயாராக இல்லை. இந்தநிலையில் கிளர்ச்சி நடந்தால் குழப்பத்தில் தான் முடியும்' என்றும் தெரிவித்தார்.

அவர் சொல்வது சரி என்றே சொல்லலாம். மூன்று வருடங்களுக்கு முன்பு வரையிலும் கூட இங்கே எந்தவிதமான அரசியல் நடவடிக்கையும் இருந்ததில்லை. பிறகு பி பி. பி. அரங்கில் பிரவேசித்தது தடை செய்யப்பட்டிருந்தும் கூட பல கட்சி ஜனநாயகத்திற்கான இதன் போராட்டம் பல உயிர்களைக்காவு கொண்டிருக்கிறது. உள்துறை அமைச்சகம் வெளியிட்ட அதிர வைக்கும் புள்ளிவிபரம்: முப்பத்தி மூன்று கொலைகள், நூற்றி எழுபத்திநான்கு கடத்தல்கள். பூட்டானை தாயகமாகக் கொண்ட நூற்றி இருபத்தி மூன்று பேர் "தேசவிரோதிகளால்" தாக்கப்பட்டது மற்றும் பல தீ வைப்புச்சம்பவங்கள், பள்ளிகள், காட்டிலாகா அலுவலகங்கள், கடைகள், சுகாதார நிலையங்கள், பாலங்கள் இவைகளைத் தகர்த்த சம்பவங்கள். இவைகளுக்கெல்லாம் பி. பி. பி. தான் பொறுப்பு என்கிறது அரசு. "பயங்கரவாதத்தில் ஈடுபடும் தேசவிரோதிகளால் ஏற்படும் பிரச்சினைகளை தொடர்ந்து எதிர்கொள்கிறோம்" என்கிறார் உள்துறை அமைச்சர் டாகோ ஷெரிங்.

வன்முறையைக் கட்டுப்படுத்த அரசசபையின் இரண்டாயிரம்பொலிசார் மற்றும் ஐயாயிரம்பேர்கொண்ட இராணுவம் ஆகியவற்றைச் சேர்ந்த பெரும் பாலானோர் தெற்கில் குவிக்கப்பட்டிருக்கிறார்கள். எட்டாயிரம் கோலாப்கள் தாங்கள் பிறந்த நாட்டிற்கு ஓடவேண்டும் என்று தீவிர நடவடிக்கையால் நெருக்கப்பட்டிருக்கிறார்கள். 'அம்னெஸ்டி இன்டர் நேஷனல்' போன்ற மனித உரிமை அமைப்புகள் அகதிகள் முகாமிற்கு விஜயம் செய்வதால் பூட்டானின் இனப் பிரச்சினை கண்ணில் பட்டுள்ளது.

ஆனால் இன்னும் பல பிரச்சினைகள் உண்டு நேபாளத்தைத் தாயகமாகக் கொண்ட ஒரு லட்சம் மக்களின் பிரச்சினை இன்னும் தீர்க்கப்படாமலேயே இருக்கிறது. திருக்பா என்ற ஒரிஜினல் பூட்டானியர்களின் தனித்தன்மையை அவர்கள் சிதைத்து விடுவார்கள் என்று அஞ்சும் அரசு அவர்களை வெளியேற்ற விரும்புகிறது. குடியேற்றவாசிகள் மனம் மகிழ விடை கொடுத்து அனுப்பி வைக்கப் படுவார்கள். நிலம் வைத்திருப்பவர்களுக்கு போதுமான நட்டத் தொகை உண்டு என்றெல்லாம் உறுதி கூறுகிறது ஆனால் "நியாயமான வெளியேற்றும்" கொள்கை குறி வைத்துப் பழிவாங்கும் போக்காக மாறி சீர்கெட்டதால் நேபாளி வம்சாவழி அதிகாரிகள் பலர் பதவியிலிருந்து ஓடி விட்டார்கள்.

நேபாள எதிர்ப்பு உணர்வுகளுக்கு அரசுதூபம் போடுவது தான் இன்னும் மோசம் தெற்கு பூட்டானில் தேச விரோத நடவடிக்கைகள் ஒரு பயங்கரவாத இயக்கம் என்ற தலைப்பிடப்பட்ட புத்தகத்தின் பிரதிகள் பள்ளிகளுக்கு அனுப்பப்பட்டன. தலை துண்டிக்கப்படும் காட்சி குண்டு வெடித்துசிதறிய சடலங்களின் அப்பட்டமான படங்கள் மற்றும் 'தேச விரோதிகள்" நடத்திய தீ வைப்பு சம்பவங்கள் பற்றிய படங்கள் இதில் இடம் பெற்றிருக்கின்றன. "நேபாளிகளுக்கு எதிரான வெறுப்பை இளம் உள்ளங்களில் பதிய வைக்க இப்போது அரசு விரும்புகிறது" என்கிறார் திம்புவில் உள்ள ஒரு தூதரக அதிகாரி

தீவிரப்போக்கு கொண்டவர்கள் மன்னரின் மிதமான அணுகுமுறையை முடக்கிப் போட்டு விட்டார்கள் பொலிசார் கைது செய்திருந்த 900 "தேச விரோதிகளுக்கு" அவர் பொதுமன்னிப்பு வழங்கினார். ஆனால், சாம்ச்சி, கேலெலச்புக், சம்த்ருப், ஜோங்கர், சுக்கா போன்ற தெற்கு மாவட்டங்களில் வளர்ச்சிப் பணிகளை மீண்டும் தொடங்க விரும்பிய போது தேசிய சட்ட மன்றத்தில் எதிர்ப்பு கிளம்பியது. "சகித்துக் கொள்ளும் போக்கில் மன்னர் போனார், பயங்கரவாதிகளிடம் சகிப்புத்தன்மை காட்டி பலனில்லை என்பதை பலர் உணர்கிறார்கள்" என்கிறார் வெளியுறவு அமைச்சர் டாவா ஷெரிங்.

ஆனால், வெளிநாட்டு பொருளாதார உதவிகள் மனித உரிமைகளோடு அதிகமாக தொடர்பு உள்ளவை என்பதால் டாவா ஷெரிங்கிற்குக் கூட கவலை ஏற்பட்டிருக்கிறது. உருவாகி வரும் புயலைத் தவிர்க்க மன்னர் தன் கை ஓங்கியிருக்கச் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் இந்த இமய அரசு உருகி ஓடி விடலாம்.

நன்றி:
இந்தியா டுடே

## அணுவாயுத விவகாரம்

# பாகிஸ்தானுக்கு அமெரிக்கா மீண்டும் எச்சரிக்கை

(வாஷிங்டன்)

அணு ஆயுதங்கள் தயாரிப்புக்கான முக்கிய பாகங்களை பாகிஸ்தான் முற்றாக அழிக்காது விட்டால் பாகிஸ்தானு...

பாகிஸ்தான் இராணுவத்தளபதி ஜெனரல் ஹசீத் நவாப் ஜனோஜோவாஷிங்டன் சென்றிருந்த போது அவரிடம் இத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்...

## திருமலை விளையாட்டுக்கழகம் வெற்றி

(சுன்னாகம்)

கந்தரோடை ஸ்ரீசனசமூக நிலையத்தின் 41 ஆவது ஆண்டு நிறைவு தினத்தைபொட்டி நடாத்தப்பட்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் திருமலை விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியுள்ளது...

## ராஜீவ் கொலையுடன்

# மலேஷியா, சிங்கப்பூர் தமிழர் நேரடி தொடர்பு

(சென்னை)

- கார்த்திகேயன்

ராஜீவ்காந்தி கொலையுண்ட சம்பவத்துடன்மலேஷிய, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் வாழும்தமிழர்களும் நேரடியாக சம்பந்தப்பட்டிருக்கின்றனர்...

...ரித்திலிருந்து தெரியவந்திருப்பதாகவும் கூறியுள்ளார்

மேலும் அவர் தெரிவித்...

இனவாதம் பேசியே வாக்குவேட்டையில் இறங்கியவர்கள். அதன் மூலம் ஆட்சிக்கு வந்தவர்கள். இன்று, இனவாதத்தைக் கைவிடுதல் என்பது இயலாத காரியமாகத்தான் இருக்கும். அத்தோடு ஒரு கட்சி கைவிட்டால் மற்றக் கட்சியும் கைவிடும் என்பதற்கும் உத்தரவாதம் எதுவுமில்லை. இந்நிலையில், இக்கட்சிகளிடம் இருந்து எதிர்பார்ப்பதற்கு ஒன்றுமில்லை.

அத்தோடு, ஆளும்கட்சிக்கு எதிர்க்கட்சிகள் ஒத்துழைக்கவேண்டும்; அரசாங்கத்தை செம்மையாக வழி நடத்துவதே எதிர்க்கட்சிகளின் கடப்பாடு என்பன போன்ற ஜனநாயகக் கோட்பாடுகளும் சிறிலங்காவில் இதுவரை கடைப்பிடிக்கப்படவில்லை. ஆளும் கட்சிக்கு எதிர் என்பதே எதிர்க்கட்சிகளின் கோட்பாடாகும். இதே போன்று ஆளும் கட்சிகளும் எதிர்க்கட்சிகளை எந்தவிதத்திலும் அனுசரித்துப் போவதும் இல்லை. இந்நிலையில், இனப்பிரச்சினைத் தீர்விற்கு ஐ. தே. கட்சி சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பது என்பதும், அதன் உதவி கிட்டும் என எண்ணுவதும் வேடிக்கையான தொன்றாகும்.

ஆனால் 'ரிச்சாட் பத்திரான குறிப்பிட்டுள்ளதுபோல் இலங்கைத்தமிழரின் பிரச்சினை சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு இன்னொருவரின் தலைவலி அல்ல. இப்பிரச்சினை ஒரு தேசிய இனப்பிரச்சினை. இதனால் இது சகலருக்கும் பொதுவானது. அத்தோடு இப்பிரச்சினை தனியாக ஐ. தே. கட்சியினால் மட்டும் உருவாக்கப்பட்டதல்ல. 'சுதந்திரத்தின்' பின் இலங்கையை மாறி மாறி ஆண்ட சிங்களப் பேரினவாத கட்சிகளினால் உருவாக்கப்பட்ட பொதுவான பிரச்சினை.

1956 இல் தனிச்சிங்கள மொழிச்சட்டம் கொண்டு வந்த போதே இலங்கையில் இனப்பிரச்சினை கூர்மையடைந்தது. அப்பொழுது ஆட்சியில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியே இருந்தது. தமிழ்மக்களின் தாயகத்தை ஆக்கிரமிக்க ஐக்கிய தேசியகட்சி மட்டும் தனியாக முயலவில்லை. கந்தளாய் குடியேற்றத் திட்டம்போன்ற ஆக்கிரமிப்புத் திட்டங்கள் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக் காலத்திலேயேதான் மேற்கொள்ளப்பட்டன. 1972 ஆம் ஆண்டு புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தின் மூலம் அரசியல் அமைப்பில் சிறுபான்மையினருக்கு இருந்த பாதுகாப்புக்களை ரத்துச் செய்ததும் சிறிலங்கா சுதந்திரக்கட்சிதான். அத்தோடு, தமிழ் மாணவர்களுக்கு எதிராக பாரிய பழிவாங்கல் நடவடிக்கையாக தரப்படுத்தல் முதன் முதல் அறிமுகப்படுத்தப்பட்டதும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஆட்சிக் காலத்திலே தான்.

இந்நிலையில் தமிழர் இனப்பிரச்சினை தனியாக ஐ. தே. கட்சியின் தலைவலியல்ல. இது ஒரு தேசிய பிரச்சினை. இதனைப் பேரினவாத கட்சிகள் இலகுவில் தட்டிக்கழித்து விடமுடியாது. ஏனெனில் அதைத் தோற்றுவித்தவர்கள் அவர்கள். இதற்கு தீர்வு காண வேண்டியது அல்லது இதனால் ஏற்படும் விளைவுகளுக்குப் பதில் அளிக்க வேண்டியதும் அவர்கள் அனைவரதும் கடமையாகும்.

# காஷ்மீர் நிலைமையை ஜோஷி சிக்கலாக்கினார்

## -சவான்கண்டனம்

காஷ்மீர் தீவிரவாதிகளின் முக்கிய பகுதியான சிறிநகரின் லால்சவுக் பகுதியில் தேசியக் கொடியை ஏற்றிவைத்ததன் மூலம் டாக்டர் முரளிமனோகர் ஜோஷி நிலைமையை மேலும் சிக்கலாக்கியிருப்பதாக இந்திய உள்துறை அமைச்சர் எஸ்.பி.சவான் கூறியுள்ளார். செய்தியாளர்களிடம் அவர் மேலும் கூறுகையில் ஜோஷியின் இப் போக்கினால் காஷ்மீர் தனிநாடாக வேண்டும் என்னும் எண்ணம் கொண்ட ஜே.கே.எல்.எப் என்னும் குழுவும், காஷ்மீர் பாகிஸ்தானுடன் இணைய வேண்டும் எனக் கோரும் ஹிஸ்புல் முஜாகிதீன் குழுவும் தமது எதிரும் புதிருமான போக்கைக் கைவிட்டு முதன்முறையாக இணைந்துள்ளனர். பாரதீய ஜனதாவின் ஒற்றுமை யாத்திரையைக் கண்டிக்க அவர்கள் இணைந்து செயற்பட்டனர் என்றார்.

நாடான இந்தியா மன்னரின் கவலைகள் அதிகரித்துக் கொண்டே போவதை எச்சரிக்கையுடன் கவனித்து வருகிறது. தான் ஒரு பொறியில் வகையாக மாட்டியிருப்பதை மன்னர் ஒக்டோபரில்தான் உணர்ந்தார். தன்னால் இரண்டு வருடங்களுக்குள் கிடைத்திருக்கும் வெளிநாட்டு உதவிகளில் இந்தியாவின் பங்கு நாற்பது சத வீதம். ஆனால் இப்போது உதவித் தொகையெல்லாம் தெற்கில் அரசின் பாதுகாப்பை வலுப்படுத்தவே பயன்படப் போகிறது என்று திம்புவிற்கு விஜயம் செய்த ஒரு சர்வதேச

கள், பள்ளிகள், காட்டிலாகா அலுவலகங்கள், கடைகள், சுகாதார நிலையங்கள், பாலங்கள் இவைகளைத் தகர்த்த சம்பவங்கள். இவைகளுக்கெல்லாம் பி.பி.பி. தான் பொறுப்பு என்கிறது அரசு. ''பயங்கரவாதத்தில் ஈடுபடும்

றெல்லாம் உறுதி கூறுகிறது ஆனால் ''நியாயமான வெளியேற்றும்'' கொள்கை கூறி வைத்துப் பழிவாங்கும் போக்காக மாறி சீர்கெட்டதால் நேபாளி வம்சாவழி அதிகாரிகள் பலர் பதவியிலிருந்து ஓடி விட்டார்கள்.

கை ஓங்கியிருக்கச் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் இந்த இமய அரசு உருகி ஓடி விடலாம்.

நன்றி :

இந்தியா டுடே

## அணுவாயுத விவகாரம்

# பாகிஸ்தானுக்கு அமெரிக்கா மீண்டும் எச்சரிக்கை

(வாஷிங்டன்)

அணு ஆயுதங்கள் தயாரிப்புக்கான முக்கிய பாகங்களை பாகிஸ்தான் முற்றாக அழிக்காது விட்டால் பாகிஸ்தானுடனான அமெரிக்க உறவுகள் மேலும் முற்றாகச் சீர்கெட்டு விடுமென அமெரிக்கா எச்சரித்திருப்பதாக வாஷிங்டனில் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனவரி முதல் வாரத்தில் பாகிஸ்தான் இராணுவத்தளபதி ஜெனரல் ஹசீத் நவாப் ஜனோஜ்ஜோ வாஷிங்டன் சென்றிருந்த போது அவரிடம் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தான் அணு ஆயுத தயாரிப்பு பாகங்களை அழித்த பிறகுதான் 1990 அக்டோபர் முதல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள அமெரிக்க உதவிகள் மீளளிக்கப்படுமென அமெரிக்கா தெரிவித்துள்ளது.

## ஆஸ்பத்திரிக்குள் பாஸ் இன்றி

# இலங்கை செஞ்சிலுவைக்கு அனுமதியில்லை

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் அங்கத்தவர்கள், உட்பட பிரிவுத்தலைவர்கள், செயலாளர்கள், பொருளாளர் மற்றும் உபதலைவர்கள் எவரும் பாஸ் இல்லாமல் போதனா வைத்தியசாலையின் நோயாளர் பிரிவுகளுக்குள் செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அறிவித்துள்ளது.

அண்மையில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி ஒருவர் இரவு வேளையில் தேவையற்ற விதத்தில் நோயாளர் பிரிவுகளினுள் நடமாடித் திரிந்ததைத் தொடர்ந்தே இம் முடிவு மேற்கொள்ளப்பட்டதாக வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி திரு. ஜெயரட்னம்தெரிவித்துள்ளார்.(75)

## அருள் திரு

# தோமஸ் அ.ம.தி. அடிகளார்

(யாழ்ப்பாணம்)



தோலகட்டி செபமாலைத் தாசர் ஆச்சிரம தாபகர் அருட் திரு தோமஸ் அ. ம. தி. அடிகள் 1964 ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம் திகதி மறைந்தார்.

ஏழைகளின் பணிக்காக தோலகட்டி செபமாலைத் தாசர்ஆச்சிரமத்தை 1928ஆம் ஆண்டு நிறுவியவர். 1886 இல் பிறந்த இவர் 1912 இல் குருத்துவம் பெற்று வாழநாள் முழுவதும் மக்களின் சேவைக்காக தன்னை அர்ப்பணித்தார்.

இவரின் 28 ஆவது மறைவு தினம் ஜனவரி 26 ஆம் திகதி யாழ். செபமாலைத்தாசர் ஆச்சிரமத்தில் பக்திச் சிறப்புடன் அமைதியாகக் கொண்டாடப் பட்டது.

## திருமலை விளையாட்டுக்கழகம் வெற்றி

(சுன்னாகம்)

கந்தரோடை ஸ்ரீ சனசமூக நிலையத்தின் 41 ஆவது ஆண்டு நிறைவு தினத்தைபொட்டி நடாத்தப்பட்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் திருமலை விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியுள்ளது.

கடந்த ஞாயிறன்று நடைபெற்ற 11 பேர் கொண்ட மேற்படி போட்டியில் திருமலை விளையாட்டுக்கழகம் அளவெட்டியுத் விளையாட்டுக் கழகத்தை 2 - 0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

## தி.மு.க. ஆர்ப்பாட்டம்

(சென்னை)

அரிசி,பால்,மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் உயர்த்தப் பட்டுள்ளதைக் கண்டித்து திராவிட முன்னேற்றக் கழகம் நேற்று தமிழகமெங்கும் ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளது.

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் ரசிகரஞ்சன சபாவின் 40ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை சபாவின் மண்டபத்தில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் புது வருட உத்தியோகத்தர்கள் தெரிவும் இடம் பெற்றது.

## வீடு இடிந்து 4 பேர் பலி

வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்திலுள்ள மேல்பட்டி என்ற கிராமத்தில் ஒரு வீட்டின் முன்முகப்பு இடிந்து விழுந்ததில் நான்கு பேர் உயிரிழந்தனர். இருபத்துமூன்று பேர் காயமடைந்துள்ளனர்.

பொங்கல் விழாவை முன்னிட்டு நடைபெறும் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகளைக் காண்பதற்காக வீட்டின் முன்முகப்பிற்கு மேல் ஐம்பதுக்கு மேற்பட்டோர் ஏறியிருந்ததாகவும் இதையடுத்து இம்முகப்பு இடிந்தபோது ஜல்லிக்கட்டு காணவந்தோர் காயமடையவும், உயிரிழக்கவும் நேரிட்டதாகவும் தெரியவருகின்றது.

## ராஜீவ் கொலையுடன்

# மலேஷியா, சிங்கப்பூர் தமிழர் நேரடி தொடர்பு

## - கார்த்திகேயன்

(சென்னை)

ராஜீவ்காந்தி கொலையுடன் சம்பவத்துடன்மலேஷிய, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் வாழும்தமிழர்களும் நேரடியாக சம்பந்தப்பட்டிருக்கின்றார்கள்எனசந்தேகிப்பதாகவிசேட புலனாய்வுக் குழுவின் தலைவர் கார்த்திகேயன் கூறியுள்ளார். இச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களுக்கு நிதி, ஆயுதம் மற்றும் பிற வகையான உதவிகளை வழங்கியிருப்பதை தாம் அண்மையில் மலேஷியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குச் சென்று விசாரித்ததிலிருந்து தெரியவந்திருப்பதாகவும் கூறியுள்ளார்

மேலும் அவர் தெரிவிக்கையில் யூன் மாதம் வரை தகவல் சேகரிப்பதற்காக கால அவகாசம் அளிக்கப் பட்டிருப்பதாகவும், இச் சம்பவத்தில் பயன்பட்ட பெல்ட் வெடி குண்டு இலங்கையில் ஓரளவுக்கு தயார் செய்யப்பட்ட நிலையிலேயே இந்தியாவுக்கு கொண்டு வரப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

# நரசிம்மராவ் - யெல்சின் நியூயோர்க்கில் சந்திப்பு

(டில்லி)

இந்தியப் பிரதமர் திரு. பி. வி. நரசிம்மராவும், ரஷ்ய ஜனாதிபதி பொரிஸ் யெல்சினும் இந்த மாதம் 31 ஆம் திகதி நியுயோர்க்கில் சந்திக்கவுள்ளனர் என புதுடில்லியில் அரச அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஐ நா. பாதுகாப்புச் சபையின் உச்சி மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இந்த இருதலைவர்களும் நியுயோர்க் செல்லவுள்ளார்கள் என்றும், அந்தச் சமயத்திலேயே இந்த சந்திப்பு நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாக். வெற்றி கொள்வதை அனுமதிக்கப் போவதில்லை

(டில்லி)

காஷ்மீரில் பாகிஸ்தான் கொண்டுள்ள தீயநோக்கங்கள் வெற்றி பெற எந்தவொரு சந்தர்ப்ப சூழ்நிலையிலும் அனுமதிக்கப்பட மாட்டாது என்று கூறி தனது ஒற்றுமை யாத்திரை பாகிஸ்தானுக்கு எச்சரிப்புவிடுத்துள்ளது என்று பாரதீய ஜனதாக்கட்சி தெரிவித்துள்ளது

கடந்த ஞாயிறன்றிரவு ஜம்முவில் நிகழ்ந்த இக் கட்சியின் மத்திய அலுவலக கூட்டமொன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

# ஐ.தே. முன்னணி கட்சியின் சின்னம் வல்லூறு

[கொழும்பு]

ஐதேகவில் இருந்து விலக்கப்பட்டவர்களால் தோற்றுவிக்கப்பட்ட ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் சின்னம் வல்லூறு என அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இக்கட்சி அங்கீகரிக்கப்பட்டதை அடுத்து கட்சி தொடர்பான அங்குரார்ப்பண சமய வைபவங்கள் வரும் 10 ஆம் திகதி நடைபெறும் எனவும்

இதனையடுத்து கட்சியின் செயற்குழு அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

(7 ஆம் பக்கம் பார்க்க)

ஈழநாதம்

# குடிவரவுசட்டத்தைஎதிர்த்து பிரான்சில் ஆர்ப்பாட்டம்

(பரிஸ்)

பிரான்ஸின் குடிவரவு விவகாரத்தில் வலதுசாரி தேசிய முன்னணியினதும் சோஷலிச அரசாங்கத்தினதும் கடும் போக்கை எதிர்த்து ஆயிரக் கணக்கான இனவிரோதஎதிர்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் பாரிய ஆர்ப்பாட்டமொன்றை நடத்யுள்ளனர்.

பிரான்சில் புகலிடம் கோருவோரை விமான நிலையங்களில் முப்பது தினங்கள்வரை தடுத்து வைத்து அவர்கள் விடயத்தில ஒரு முடிவு எடுக்கும் விதத்திலான ஒரு சட்டத்தை உள்துறை அமைச்சர் பிலிப்பே மார்ச்சான்ட் அறிமுகப்படுத்த முன் வந்தமையே எதிர்ப்பு வாதிகளின் இந்த ஆர்ப்பாட்டத்திற்கு முக்கிய காரணமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் டினேஸ் டி.லா பஸ்டிலே, டினேஸ் டி லா நேவுன் எனப் படும் பாரிஸின் பிரதான இநசதுக்கங்களையும் நோக்கிச்சென்றது. இதில்ஒரு லட்சம் பேர் கலந்துகொண்டனர். இப்பேரணியை மனித உரிமைகள் குழுவினர் இடதுசாரி, மத்திய கடசியினர், தொழிற்சங்கத்தினர் ஆகியோர் கூட்டாக ஒழுங்கு செய்திருந்தனர்.

## குப்பைத் தொட்டிக்குள் கிரனைட்டுக்கள் மீட்பு

(சென்னை)

ராஜீவ்காந்தி கொலை தொடர்பாகவிசாரணை நடாத்தி வரும் விசேட குழுவினர் கடந்த வாரம் தஞ்சாவூர் மாவட்டத்தில், குப்பைத் தொட்டிக்குள் இருந்து இரு கிரனைட்டுகளையும், ஒரு வோக்கிடோக்கி மற்றும் இரு அன்ரனாக்களை எடுத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கொலை வழக்கில் குற்ஞ் சாட்டப்பட்டிருக்கும் சுசீந்திரன் என்ற மகேஸ் கொடுத்த தகவலை அடுத்தே இவற்றைக் கைப்பற்றியதாகவும்,

இவர் தமிழ்த் தேசிய மறுமலர்ச்சிப் படையின் உறுப்பினர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேநேரம் பொள்ளாச்சியில் பாழும் கிணற்றிலிருந்து வயலர்ஸ் செற் ஒன்றையும் அன்ரனாக்களையும் நான்கு சைனட் வில்லைகளையும் ஆயுதங்களையும் தாம் கைப்பற்றியதாக விசேட விசாரணைக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

## வேலை நிறுத்தம் செய்ய வேண்டாமென இந். ஜனாதிபதி கோரிக்கை

(டில்லி)

இந்தியா தனது பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள உதவும் பொருட்டு இரண்டு ஆண்டுகளுக்கு வேலை நிறுத்தத்தில் இறங்க வேண்டாம் என இந்திய ஜனாதிபதி ஆர்.வெங்கட்ராமன் தொழிற் சங்கத் தலைவர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வெளிநாட்டுக்கடன் நெருக்கடிகளுக்கு மத்தியில் இந்திய அரசாங்கத்தின் தீவிர பொருளாதார சீர்திருத்த முயற்சிக்கு தாங்கள் காட்டும் எதிர்ப்பில் பொறுமையைக் கடைப்பிடிக்குமாறு இடதுசாரி எதிர்க் கட்சிகளையும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

நாடு மோசமான பொருளாதார, நிதி நெருக்கடிகளைக் கடந்துகொண்டிருக்கிறது. நாம் இந்த நெருக்கடியில் இருந்து மீளவேண்டுமானால் குறைந்தது இரு ஆண்டுகளுக்காவது வேலை நிறுத்தம், உள்ளிருப்பு வேலை நிறுத்தம் தாமத வேலை, சட்டப்படி வேலை ஆகியவற்றை வலிய முன்வந்து தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் வெங்கட்ராமன் கேட்டுக்கொண்டார்.

## யாழ்தேவியில் கொள்ளை; [illegible] தேடப்படுகின்றனர்

## நிவாரண விநியோகத்தில் தமிழ் மீனவர் புறகணிப்பு

(வாழைச்சேனை)

வாழைச்சேனை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் வரும் நாசிவன்தீவு, பேய்த்தாழை ஆகிய இரு கிராமங்களைச் சேர்ந்த மீனவர்கள் பாதிப்பு நிவாரணம் வழங்கப்படுவதிலிருந்து புறக்கணிக்கப்பட்டுள்ளனர். இக் கிராமங்களில் வாழ்பவர்களில் தொண்ணூறு வீதத்திற்கும் அதிகமானோர் மீனவர்கள் என்பதுடன் தற்போது வழங்கப்படும் வன்செயல் பாதிப்பு நிவாரணமான ஐநூறு ரூபாவும் இதுவரையில் இவர்களுக்கு கிடைக்கவில்லை.

இவ் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் ஏனைய பகுதிகளில் மீனவர் பாதிப்பு நிவாரணமாக நாலாயிரம் ரூபா வழங்கப்பட்டிருக்கிறது. இக் கிராம மக்களுக்கு மட்டும் நிவாரணம் எதுவும் வழங்கப்படாமைக்கு அதிகாரிகளின் இனவாதப் போக்கே காரணம் எனத் தெரியவருகிறது.

## கால்நடை வழங்கும் திட்டம்

தமிழீழ ஆய்வு நிறுவனம் மிருக வைத்தியர்களூடாக காலநடைகள் வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது.

இத் திட்டத்தின் கீழ் வட்டுக்கோட்டை, கோப்பாய், சங்கானை,தெல்லிப்பளைப் பகுதிகளில் கால்நடை வளர்ப்பில் ஆர்வமும் அனுபவமும் உள்ள வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 95 குடும்பங்களுக்கு 150 நல்ல இன மறியாடுகளும், 17 கடா ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளன. கால்நடைகளைப் பெற்றவர்கள்,கால்நடை வளர்ப்போர் சங்கத்தில் அங்கத்தவர்களாகியுள்ளனர்.

## மாதாந்த உதவிப்பணம் தீவக மக்களு. விநியோகம்

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச்சேர்ந்த நயினாதீவு. புங்குடுதீவு, வேலணை, அல்லைப்பிட்டி, மண்டைதீவு ஆகிய இடங்களை சேர்ந்த மாதாந்த உதவிப் பணம் பெற்றுக்கொள்வோர்களுக்கான கொடுப்பனவுகள் அந்தந்தப்பகுதி கிராமசேவையாளர் பிரிவில் உள்ள காரியாலயத்தில் வைத்துகொடுக்கப் பட்டுவருகின்றது இதேபோன்று இப்பகுதியைச் சேர்ந்தகாசநோய் தொழுநோய், புற்றுநோய் பீடித்துள்ளவர்களுக்கான கொடுப்பனவுகளும் யாழ். செயலகத்தில் இயங்கிவருகின்ற வேலணைப் பகுதி பிரதேச பிரதிச்செயலாளரின் அலுவலகத்தில் வைத்துக் கொடுக்கப்பட்டுவருகின்றது.

## துப்பாக்கி முனையில் தமிழர் வீடு கொள்ளை

(மாத்தளை)

பலாபத்வெல, கிரிகல்பொத்த என்னுமிடத்தில் வசிக்கும் தமிழர் ஒருவரின் வீட்டுக்குள் துப்பாக்கிகளுடன் வந்த மூவர் துணிகரக் கொள்ளை ஒன்றை நடத்தியுள்ளனர். சுமார் ஏழாயிரத்து ஐநூறு ரூபா ரொக்கப் பணம் மற்றும் தங்க நகைகள் உட்பட ரூபா ஐம்பதாயிரம் பெறுமதியான பொருள்கள் கொள்ளையிடப்பட்டதாக தெரியவருகின்றது.

சம்பவதினம் இரவு பத்து மணியளவில் ஜன்னலை உடைத்துக்கொண்டு வீட்டுக்குள் நுழைந்து கொள்ளைநடத்திய இவர்கள் 'தாங்கள் பொலிசார்' எனவும் தெரிவித்துள்ளனர். துப்பாக்கி முனையில் வீட்டிலிருந்தவர்களை அச்சுறுத்தி திறப்புகளைப் பெற்ற கொள்ளையர்கள் போகும் போது ஆகாயத்தை நோக்கி வேட்டுஒன்றையும் தீர்த்தனர்.

இச்சம்பவம்பற்றி விசாரணை நடத்தும் மாத்தளைப் பொலிசார் துப்பாக்கிக்கான இரண்டு ரவைகளைக் கைப்பற்றியுள்ளனர்.

# பதவி உயர்வில் மோசடி இன்ஸ்பெக்டர்கள்போர்க்கொடி

(கொழும்பு)

ஏ. எஸ். பி. பதவி உயர்வு வழங்கும்போது தமது பெயர்களைக் கவனியாது தள்ளிவிட்டதாகக் கூறி ஐம்பதிற்கும்அதிகமான மூத்தபொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் அடுத்த கிழமை உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் மீறல் வழக்கொன்றைத் தாக்கல் செய்யவுள்ளார்கள். கடந்த சனியன்று பம்பலப்பிட்டி பொலிஸ் தலைமையகத்தில் நடந்த சிறிலங்கா பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் சங்கக் கூட்டத்தில் மேற்படி முடிவு எடுக்கப்பட்டது.

தாக்கல் செய்யப்படவிருக்கும் மனுவில் பொலிஸ் மா அதிபரும் (ஐ. ஜி. பி.), பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் பிரதிவாதிகளாகக் காட்டப்படவுள்ளனர்.

பௌத்த மத குருமாரின் சிபார்சு மற்றும் அரசியல்செல்வாக்கின் அடிப்படையில் பலருக்குப் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் தரப்பில் சொல்லப்படுகிறது.

குறைந்தது 62 மூத்த பொலிஸ் இன்ஸ்பெக்டர்களைத் தள்ளிவைத்துவிட்டு கனிஷ்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர்களுக்குப் பதவி வழங்கும் சபை பதவி உயர்வு வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அடிப்படை மனித உரிமைகள், மனித உரிமைகள் மீறல் குற்றச் சாட்டுக்கள் தொடர்பாக தற்போது விசாரணைக்கு உட்படுத்தப் பட்டிருக்கும் 15 பொலிஸ் இன்ஸ்பெக்டர்களுக்கும் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது என்றும்,

பதவியிலிருந்து விலக்கப்பட்டு 13 ஆண்டுகளுக்குப் பிறகு மீளவும் நியமனம் வழங்கப்பட்டவர்களுக்கும் மேத்காசிய தலை நகரமொன்றில் சம்பளமற்ற லீவில் 2 வருடகாலம் வாழ்பவர் ஒருவருக்கும் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. ஏ. எஸ். பி. பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள்குறைந்த பட்சம் 15 வருடங்கள் பொலிஸ்இன்ஸ்பெக்டர்களாக [illegible] டியதை அடுத்து குறிப்பிட்ட இன்ஸ்பெக்டருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் சங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் பட்டதாரிகளை நேராக ஏ. எஸ். பி. யாக சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகத் தேர்வையும் கட்டாயப் பரீட்சையில் தேறிய அதிகாரிகளையும் நேர்முகத் தேர்விற்கு அழைக்காமல், பதவி உயர்வு வழங்கும் சபை திடீரென்று கலைக்கப்பட்டது தொடர்பாகவும் மேற்படி சங்கம் கரிசனை கொண்டுள்ளது. கட்டாயப் பரீட்சையில் மொத்தம் 40 இன்ஸ்பெக்டர்கள் தலா 450 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்துள்ளார்கள் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

பதவி உயர்வு வழங்கும் சபையில் பாதுகாப்பு அமைச்சின் பிரதிச் செயலாளரும், இரண்டு மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர்களும் அங்கம் வகித்தார்கள்.

## மேஜர்கௌரியின் நினைவுக் கூட்டம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் கடந்த 26 ஆம் திகதி மேஜர் கௌரியின் முதலாம் ஆண்டு நினைவு தினக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அடம்பன் பிரதேச பொறுப்பாளர் நந்தகுமார், நானாட்டான் அரசியல் நிர்வாக பொறுப்பாளர் கணேஸ், மேஜர் கௌரியின் தந்தையார் பொ. சதானந்தசிவம் மற்றும் பிரமுகர்கள் கலந்து கொண்டு உரையாற்றினர்.

## உலர் உணவு விநியோகம்; அடுத்த மாதம் ஆரம்பம்

(நமது நிருபர்)

யாழ். மாவட்டத்தில் கடந்த மூன்று மாதங்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உலர் உணவு விநியோகம் மீண்டும் அடுத்த மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள தாக யாழ். செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்தவருடம் அ,உ அட்டைகளுக்கு கட்டுப்பாட்டு விலைக்கு வழங்கப்பட்டுவந்த அத்தியாவசியப் பொருள்களின் விநியோகம் கடந்த ஒக்டோபர் மாதத்துடன் நிறுத்தப்பட்டது தெரிந்ததே.

தற்போது ஓரளவு பொருள்கள் கையிருப்பில் இருப்பதால் [illegible]

## இடைக்கட்டுக் குளம் புனரமைப்பு

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் பல வருடங்களாக திருத்த வேலை எதுவும் செய்யப்படாமல் இருந்த இடைக்கட்டுக் குளம் அப்பகுதி கிராமிய உற்பத்திக் குழு ஒழுங்கு செய்த சிரமதானப பணி மூலம் சீர் திருத்தப்பட்டுள்ளது.

இக் குளத்தின் மூலம் நீர்ப்பாசன வசதிபெற்று 300 ஏக்கர் வரையில் நெற்செய்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் இதனால் 155 குடும்பங்கள் பயன் பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## 90கோடி

டாலர்கள் குறைவானது என்றும்,

வருடாந்த வளர்ச்சி வீதத்தில் ஏழு சதவிகித அதிகரிப்பு காணப்பட்டமை, அந்நிய முதலீடுகள் அதிகரித்தமை, அரச தொழில் முயற்சிகள் துரிதமாக தனியார் மயமாக்கப்பட்டமை ஆகியவை உதவி வழங்கும் நாடுகளின் பாராட்டைப் பெற்றுள்ளன என்றும், அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

## கடத்தலுக்கு

தடை முகாமில் மின் கலப் பொருளுடன் தமிழர் இராணுவத்தால் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவரும் இராணுவ கோப்ரலும், பொலி [illegible]

## அடக்குமுறை

செய்ய வேண்டாமென

# இந். ஜனாதிபதி கோரிக்கை

(டில்லி)

இந்தியா தனது பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள உதவும் பொருட்டு இரண்டு ஆண்டுகளுக்கு வேலை நிறுத்தத்தில் இறங்க வேண்டாம் என இந்திய ஜனாதிபதி ஆர்.வெங்கட்ராமன் தொழிற் சங்கத் தலைவர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வெளிநாட்டுக்கடன் நெருக்கடிகளுக்கு மத்தியில் இந்திய அரசாங்கத்தின் தீவிர பொருளாதார சீர்திருத்த முயற்சிக்கு தாங்கள் காட்டும் எதிர்ப்பில் பொறுமையைக் கடைப்பிடிக்குமாறு இடதுசாரி எதிர்க் கட்சிகளையும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

நாடு மோசமான பொருளாதார, நிதி நெருக்கடிகளைக் கடந்துகொண்டிருக்கிறது. நாம் இந்த நெருக்கடியில் இருந்து மீளவேண்டுமானால் குறைந்தது இரு ஆண்டுகளுக்காவது வேலை நிறுத்தம், உள்ளிருப்பு வேலை நிறுத்தம் தாமத வேலை, சட்டப்படி வேலை ஆகியவற்றை வலிய முன்வந்து தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் வெங்கட்ராமன் கேட்டுக்கொண்டார்.

# யாழ்தேவியில் கொள்ளை;

## சிப்பாய்கள் தேடப்படுகின்றனர்

வவுனியா - கொழும்பு தமிழ்ப் பயணிகளிடம் கொள்ளையடித்து வந்தவர்கள் என்று சந்தேகிக்கப்படும் சில இராணுவத்தினரை சிறிலங்கா பொலிசார் தேடுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் குறித்து இரு சந்தேக நபர்களை பொலிசார் விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இவர்களிடம் இருந்து கொள்ளையின் பாணிபற்றி பொலிசார் தெரிந்து கொண்டனராம். பெறப்பட்ட விபரங்கள் வருமாறு. பன்னிரண்டு பேர்களைக் கொண்ட குழுவினர் வெயாங்கொடை ரயில் நிலையத்தில் ரயிலில் ஏறி தமிழ்ப் பயணிகளிடம் தம்மை பொலிசார் அல்லது இராணுவத்தினர் என அறிமுகப் படுத்தி பயணிகளிடம் நீங்கள் விடுதலைப் புலிகள் உறுப்பினர் என அச்சுறுத்தி விசாரணைக்கு என தனியாக அழைத்துச் சென்று நகை, பணங்களை கொள்ளையடித்தனர் எனத் தெரியவருகின்றது

### அக்பர்

புறப்பட்ட எம். வி. அக்பர் என்னும் கப்பல் இன்று திருக்கோணமலை துறைமுகத்தை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த கப்பலில் வரும் 659 பேரில் 455 பேர் அரசாங்க ஊழியர்கள் என தெரிவிக்கப் படுகின்றது.

மொத்தம் 28,727 அகதிகள் நாடு திரும்ப சம்மதித்திருப்பதும் அடுத்துவரும் வாரங்களில் அவர்கள் நாடுதிரும்புவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### மேற்குலக

லாந்து போன்ற நாடுகள் சமஷ்டி ஆட்சிமுறையை தழுவியிருப்பதால் இனப்பிரச்சினைக்கு அவை சமஷ்டித் தீர்வை வலியுறுத்தலாமெனசிறிலங்கா பயப்படுகிறது. அத்துடன் இந்திய அரசும், தமிழர் பிரச்சினை தமது ஆதிக்க வலையத்திற்கு அப்பால் கொண்டு செல்லப்படுவதை விரும்பவில்லை இந்திய அரசின் அழுத்தமும் சிறிலங்காவை இந்த நிலைப்பாட்டிற்குள் தள்ளியிருக்கலாமென கொழும்பு ராஜதந்திர வட்டாரங்கள் கூறுகின்றன.

### கனடா

உரிமைகள் குழு சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தியது.

இதேவேளை தங்காலைப் பகுதியைச் சேர்ந்த இருநூறு பேருக்கும் அதிகமானோர் சிறிலங்கா சுதந்திரக்கட்சி எம். பி. மகிந்த ராஜபக்சவின் இல்லத்தில் சனடியன மனித உரிமைகள் குழுவின் இரண்டு உறுப்பினர்களை சந்தித்து உரையாடியதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

### கிராமங்கள்

காண்டிபுரம், திக்கோடை, 38 ஆம் கிராமம், 39 ஆம் கிராமம், 40ஆம் கிராமம் என்பன சிறிலங்கா இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டது. பொதுமக்கள் பலர் கடுமையாக தாக்கப்பட்டனர்.

16 வயதுடைய இரத்தின சிங்கம் சற்குணம் (விவேகானந்தபுரம்), 50 வயதுடைய ஐந்து பிள்ளைகளின் தந்தையான சண்முகம்குமார் என்னும் இரண்டு பொது மக்கள் கைது செய்யப்பட்டு தாக்கப் பட்டபின்முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டனர்.

பாலையடிவெட்டை, பெரிய போரதீவு, வெல்லாவெளி இராணுவ முகாம்களிலிருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினரே இந்த சுற்றிவளைப்பில் ஈடுபட்டனர்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

பாளர் நந்தகுமார், நானாட்டான் அரசியல் நிர்வாக பொறுப்பாளர் கணேஸ், மேஜர் கௌரியின் தந்தையார் பொ. சதானந்தசிவம் மற்றும் பிரமுகர்கள் கலந்து கொண்டு உரையாற்றினர்.

நடந்த சிறிலங்கா பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் சங்கக் கூட்டத்தில் மேற்படி முடிவு எடுக்கப்பட்டது.

தாக்கல் செய்யப்படவிருக்கும் மனுவில் பொலிஸ் மா அதிபரும் (ஐ. ஜி. பி.), பாதுகாப்பு அமைச்சின் செயலாள

# உலர் உணவு விநியோகம்;

# அடுத்த மாதம் ஆரம்பம்

(நமது நிருபர்)

யாழ். மாவட்டத்தில் கடந்த மூன்று மாதங்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உலர் உணவு விநியோகம் மீண்டும் அடுத்த மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள தாக யாழ். செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்தவருடம் அ,உ அட்டைகளுக்கு கட்டுப்பாட்டு விலைக்கு வழங்கப்பட்டுவந்த அத்தியாவசியப் பொருள்களின் விநியோகம் கடந்த ஒக்டோபர் மாதத்துடன் நிறுத்தப்பட்டது தெரிந்ததே.

தற்போது ஓரளவு பொருள்கள் கையிருப்பில் இருப்பதால் எதிர்வரும் முதலாம் திகதி முதல் நான்கு வாரங்களுக்கு உணவுப் பொருள்களை அ, உ அட்டைகளுக்கு வழங்க செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதன்படி பின்வரும் அளவுகளில் வாரம் ஒன்றிற்கு பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

| | ஒரு அங்கத். | இரு அங்கத். | மூன்று அங்கத். | நான்கு அங்கத். | ஐந்தும் அதற்கு மேற்ப. | விலை 1கிலோ ரூபா. |
|---|---|---|---|---|---|---|
| அரிசி | 2 கிலோ | 3 கிலோ | 4 கிலோ | 5 கிலோ | 6 கிலோ | 14-80 |
| சீனி | 250 கிராம் | 250 கிராம் | 500 கிராம் | 750 கிராம் | 1 கிலோ | 25-90 |
| பருப்பு | 250 கிராம் | 250 கிராம் | 500 கிராம் | 750 கிராம் | 1கிலோ | 50-00 |

மேற்படி விகிதத்தில் நுகர்வோர் தமது பொருள்களை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் பெற்றுக்கொள்ளலாம். (ச)

### இனவாதம்

நிறுத்த வேண்டும் என்று கொழும்புப் பத்திரிகையொன்று எச்சரிக்கை செய்துள்ளது

சண்டே ஒப்சேவர் பத்திரிகையில் யூகோஸ்லாவியா அனுபவங்கள் பாடமாக அமையட்டும் என்ற தலைப்பில் எழுதப்பட்டு இருக்கும் கட்டுரையில் மேலும்,

தம்மைத்தாமே நாட்டுப் பற்றுமிக்க சிங்களவர்களாகப் பிரகடனம் செய்திருப்பவர்கள் அமைச்சர் தொண்டமனுக்கு எதிராகவும், மலையக மக்களுக்கு எதிராகவும், அதிகாரப் பரவலாக்கலுக்கு எதிராகவும் கருத்து வெளியிடுவதை உடன் நிறுத்த வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

### பேரினவாதத்தின்

சினையில் அரசியல் நலனை மனதில் கொண்டு பேரினவாதிகள் செயற்படுவது கவலைக்குரியதாகும் என்றார்.

மேலும் எமது நாட்டு விவகாரத்திலே இந்தியா தலையிட்டு வடக்கு - கிழக்கை இந்தியப்படை நிர்வகித்த நிலையை கடந்த பின்னரும் கூட பிரச்சினைக்கு தீர்வொன்றைக் காண்பதற்கு தடையாக பேரினவாத சக்திகள் கூச்சல் போடுவது துரதிஷ்டவசமானது எனவும் குறிப்பிட்டார்.

### அரச

முப்பதாயிரம்இலங்கைத்தமிழ் அகதிகளில் முதல் கட்டமாக மூவாயிரத்து ஐந்நூறு பேர் மட்டுமே தற்போதைக்கு அனுப்பப்படவுள்ளனர். இவர்கள் பத்து தினங்களுக்கு ஒருமுறை எழுநூற்றிஐம்பது பேர் என்ற வீதத்தில் கப்பலில் அனுப்பப் படுவர்.

அத்துடன் இலங்கைக்குத் திருப்பி அனுப்பும் இந்திய-தமிழக அரசுகளின் முயற்சிக்கு அகதிகளில் பெரும்பாலானோர் எதிர்ப்புத் தெரிவித்திருப்பதால்நிலைமை திருந்தாதவரை அகதிகள் அனைவரும் இலங்கை திரும்புவது தற்போதைக்கு சாத்தியமில்லையெனவும் சென்னையிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனிடையே இந்தியாவில் அகதிகளாக இருக்கும் இலங்கை அரசாங்க ஊழியர்கள் வேலைக்குத் திரும்பி வருவதற்கு காலக்கெடு எதுவும் நிர்ணயிக்கப்படவில்லைஎன்று கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசிய சிறிலங்கா ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

டர்களுக்குப் பதவி வழங்கும் சபை பதவி உயர்வு வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அடிப்படை மனித உரிமைகள், மனித உரிமைகள் மீறல் குற்றச் சாட்டுக்கள் தொடர்பாக தற்போது விசாரணைக்கு உட்படுத்தப் பட்டிருக்கும் 15 பொலிஸ் இன்ஸ்பெக்டர்களுக்கும் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது என்றும்,

பதவியிலிருந்து விலக்கப் பட்டு 13 ஆண்டுகளுக்குப் பிறகு மீளவும் நியமனம் வழங்கப்பட்டவர்களுக்கும் மேத்காசிய தலை நகரமொன்றில் சம்பளமற்ற லீவில் 2 வருடகாலம் வாழ்பவர் ஒருவருக்கும் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. ஏ. எஸ். பி. பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள்குறைந்த பட்சம் 15 வருடங்கள் பொலிஸ்இன்ஸ்பெக்டர்களாக சேவையாற்றியிருக்கவேண்டும் என்ற விதியையும் மீறிக் குறைந்த காலம் சேவையிலுள்ளவர்களுக்கும் பதவி வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றும் ஒரு பொலிஸ் இன்ஸ்பெக்டருக்குப் பதவி உயர்வு வழங்கத் தவறும் பட்சத்தில் தான் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் போவதாக ஒரு பிக்கு மிரட்

தேர்விற்கு அழைக்காமல், பதவி உயர்வு வழங்கும் சபை திடீரென்று கலைக்கப்பட்டது தொடர்பாகவும் மேற்படி சங்கம் கரிசனை கொண்டுள்ளது. கட்டாயப் பரீட்சையில் மொத்தம் 40 இன்ஸ்பெக்டர்கள் தலா 450 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்துள்ளார்கள் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

பதவி உயர்வு வழங்கும் சபையில் பாதுகாப்பு அமைச்சின் பிரதிச் செயலாளரும், இரண்டு மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர்களும் அங்கம் வகித்தார்கள்.

### ஐரோப்பிய

தருவிக்கப்படும் உணவு வகைகள்பரிசோதிக்கப்படுவதில்லை என்று கொழும்பு பல்கலைக் கழக அணுக்கதிர்வீச்சு ஆய்வு கூடப்பொறுப்பாளர் கலாநிதி தர்மவர்தனா தெரிவித்தார்.

சிறிலங்கா இறக்குமதி செய்யும் உணவு, பால்மா போன்றவற்றை ஆய்வுகூடத்தில் பரிசோதிக்கும் பணியில் தான் ஈடுபட்டு வந்ததாக கூறும் கலாநிதி தர்மவர்தனா தொலைபேசியில் சிலர் தம்மைப் பயமுறுத்தி வருவதால் இந்தப் பணியைத் தன்னால் தொடர்ந்து செய்யமுடியாதிருப்பதாகத் தெரிவித்தார். இறக்குமதி வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் ''பெரும்புள்ளிகள்'' சிலர் இந்தப் பணியை கைவிடுமாறு கோரி தனக்குப் பணம் கொடுக்க எத்தனித்ததாகவும் தெரிவித்தார்.

இறக்குமதி செய்யப்படும் உணவு வகைகள் உடம்புக்குத் தீங்கு விளைவிக்கக் கூடியவை பரிசோதனை எதுவும் இன்றித் தங்கு தடையில்லாமல் சிறிலங்கா ஐரோப்பாவிலிருந்து உணவு வகைகளை இறக்குமதி செய்கிறது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் (யு. என். டி. பி.) அனுசரணையுடன் சுற்றுச் சூழல் தொடர்பான பத்திரிகையாளர் நடத்திய ''சுற்றுச் சூழலும் அபிவிருத்தியும்'' என்ற கருத்தரங்கில் கருத்துத் தெரிவிக்கும் போது கலாநிதி தர்மவர்தனா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

### கடத்தலுக்கு

தடை முகாமில் மின் கலப் பொருளுடன் தமிழர் இராணுவத்தால் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவரும் இராணுவ கோப்ரலும், பொலிஸாரும், பற்றரியை அனுப்பி வைப்பதற்கு காரணமாக இருந்த இன்னொரு தமிழரும் வவுனியா இராணுவ முகாம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனராம்.

தற்போது இவர்கள் மீதான விசாரணை நடைபெற்று வருவதாகத் தகவல் கிடைத்துள்ளது. (தி)

இக் குளத்தின் மூலம் நீர்ப்பாசன வசதிபெற்று 300 ஏக்கர் வரையில் நெற்செய்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் இதனால் 155 குடும்பங்கள் பயன் பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### 90கோடி

டாலர்கள் குறைவானது என்றும்,

வருடாந்த வளர்ச்சி வீதத்தில் ஏழு சதவிகித அதிகரிப்பு காணப்பட்டமை, அந்நிய முதலீடுகள் அதிகரித்தமை, அரச தொழில் முயற்சிகள் துரிதமாக தனியார் மயமாக்கப் பட்டமை ஆகியவை உதவி வழங்கும் நாடுகளின் பாராட்டைப் பெற்றுள்ளன என்றும், அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

### அடக்குமுறை

தில்போராட்டங்கள் தொடர்ந்தும் கிராம மட்டத்தில் சகல உதவி அரச அதிபர்கள் பிரிவுகள் தோறும் நடாத்த தீர்மானித்திருப்பதாக மேற்படி குழுவின் அறிக்கை மூலம் தெரியவருகிறது. இதற்கான பூர்வாங்க ஆலோசனைகளும் ஏற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன. இதற்குச் சகல மக்களினதும் பூரண ஒத்துழைப்புக் கோரப்பட்டுள்ளது.

# மரண அறிவித்தல்

## திரு. வினாயகமூர்த்தி கனகவினாயகம்

(வி. கே. ஆர். ஆட்ஸ்)

திரு. வினாயகமூர்த்தி கனகவினாயகம் அவர்கள் 26-1-92 அன்று கிளிநொச்சி கணேசபுரத்தில் காலமானார்.

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கணேசபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் கமலேஸ்வரியின் அன்புக்கணவரும், காலஞ் சென்றவினாயகமூர்த்தி மகேஸ்வரி தம்பதிகளின் மூத்த புதல்வரும், இராசையாப் பத்தர் இராசலட்சுமி தம்பதிகளின் மருமகனும், சண்முகநாதன், கஜேந்திரன், நாகசுதர்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயகாந்தன், சந்திரன், (மெக்கானிக்- வீரமாகாளி அம்மன் கோயிலடி) விஜயகாந்தன், காலஞ் சென்ற சாந்தன், காந்திமலர், ஜோதிமலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும், திலகேஸ்வரி தங்கலிங்கம் பரந்தன் (இரசாயனகூட்டுத்தாபனம் கொழும்பு) ஈஸ்வரலிங்கம் (R. M. P. கொழும்பு) கணேசலிங்கம் (கனடா) இராசலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் தியாகராஜா (கார்த்திகா நகைத்தொழிற்சாலை, கிளிநொச்சி) வின் சகலனும் ஜெயக்குமார், விமலாதேவி, யமுனா, பிரியதர்சினி ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரரும் லோகசுதா, சர்மிளா, கார்த்திகா ஆகியோரின் பெரிய தகப்பனாரும் தர்மானந், அனுஸ்பிரியா, திசாந், றேசாணி அசங்கா ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரது ஈமக்கிரியைகள் (27.1.92) திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு அன்னாரது கணேசபுர இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருநகர் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் தயவு செய்து ஏற்றுக் கொள்ளுமாறு அறியத்தருகின்றோம்.

தகவல்:

வை. தியாகராஜா

கார்த்திகா நகைத்தொழிற்சாலை,

கிளிநொச்சி.

(2156)